உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ அஷ்டாவக்கிரரிஷியால்

அருளிச்செய்த

அஷ்டாவக்கிரர்கீதை.

சுலோகப்படிவசனம்

இஃது

சமீவனக்ஷேத்திரமென்னும் கோயிலூர்

ஸ்ரீ முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ - சிதம்பர சுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமியவர்களால்

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

ஆரணி - குப்புசெட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி.

சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வசித்து௵ ஆவணிமீ

இதன்விலை அணா-௪.

அஷ்ட்டாவர்க்கிரர்கீதை.

சிவசிவசங்கீர்த்தனம்.

அடியவர்திறத்துநிந்தாஸ்துதி.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சூசீபத்திரம்.

நெம்பர்		பக்கம்.	சுலோகதுகை.
௧	உபதேச அதிகாரம் - - - -	௩	௧௭
௨	ஆத்மானுபவ அஷ்டவிம்சதி - -	௫	௨௮
௩	உபதேசசதுர்த்தெசம் - - -	௯	௧௩
௪	உல்லாசஷட்கம் - - - -	௧௦	௬
௫	லயசதுஷ்க்கம் - - - -	௧௧	௪
௬	உபதேசசதுஷ்க்கம் - - - -	௧௨	௪
௭	அநுபவபஞ்சகம் - - - -	௧௨	௫
௮	பந்தமோக்ஷசதுஷ்க்கம் - - -	௧௩	௪
௯	நிர்வேதனஅஷ்டகம் - - -	௧௪	௮
௧௦	உபசமனஅஷ்டகம் - - -	௧௫	௮
௧௧	ஞானஅஷ்டகம் - - -	௧௬	௮
௧௨	ஏவமேவாஅஷ்டகம் - - -	௧௭	௫
௧௩	இதரசுகசத்தகம் - - - -	௧௮	௭
௧௪	சாந்திசதுஷ்க்கம் - - - -	௧௯	௪
௧௫	தத்துவவுபதேசவிம்சதி - - -	௨௦	௧௯
௧௬	உபதேசஏகாதெசம் - - - -	௨௨	௧௦
௧௭	தத்துவவுபதேசவிம்சதி - - -	௨௪	௧௮
௧௮	சமம்சமன்சதகம் - - - -	௨௬	௯௩
௧௯	ஆத்மவிசிராந்திஅஷ்டகம் - -	௩௮	௮
௨௦	ஜீவன்முக்திசதுர்த்தெசம் - - -	௩௯	௧௪

புத்தகவிளம்பரம்.

இப்புத்தகமும், இலக்கண இலக்கியநூற்றிரட்டுப்புத்தகமும், அத்தொய்தசாஸ்திரத்திரட்டுப்புத்தகமும், இன்னும்பல வேதாந்த சாஸ்திரங்களும், கருமம், பத்தி, யோகத்துக்குரிய நூல்களும், வேண்டியவர்கள் சென்னபட்டணம் முத்தியாலுப்பேட்டை பவழக்காரவீதி. கு. ம. பெ. ரி. கடைச்செட்டியாரிடத்திலும்., ரா. ம. மு. கடைச்செட்டியாரிடத்திலும், சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை. ம-ா-ா-ஸ்ரீ பொன்னுச்சாமிபிள்ளை அவர்களிடத்திலும், தஞ்சாவூர் - வடுகத்தெருந. வீரபத்திரபிள்ளையவர்களிடத்திலும், மதுரை புதுமண்டபம். ம-ா-ா-ஸ்ரீ புஸ்த்தகவியாபாரம். ஷண்முகபிள்ளை யவர்களிடத்திலும், திருநெல்வேலி மேலரதவீதி, டி. எஸ். சிவராமபிள்ளையவர்களிடத்திலும், கிரயத்துக்குபெற்றுக்கொள்ளலாம்.

வெளியூரார் தபார்கூலியும் புத்தகக்கிரயமும் ஆகிய இவைகளைச்சேர்த்து நூ யைமணியார்டர் செய்து புத்தகம் பெற்றுக் கொள்ளலாம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

அஷ்டாவர்க்கிரர்கீதை.

முதலாவது,

உபதேச அதிகாரம்.

அஷ்டாவர்க்கிரரிஷியானவர் பதரிகாவனத்திலிருக்கச்சே பார்க்கவனென்கிற முனீந்திரன் அவருக்குத்தெண்டம்பண்ணிச் சுவாமி யெனக்குத் தத்துவசொரூப மறியச்சொல்லுமையா வென்றுகேட்கத் தயவுண்டானவராய்ச் சமுசயமில்லாதபடிக்குத் தெரியச்சொல்லுகின்றார். (க)

முத்தியி லிச்சையுண்டானதே யுண்மையானால் விஷயங்களிலே இச்சையைவிட்டு விட்டு சமதமருசிமார்க்கந் தயை சத்தியம் அமிர்தம்போலே பஜனைபண்ணவேண்டும். (உ)

நீ பிருதிவியுமல்ல அப்பு, அக்கினி, வாய்வு, ஆகாசமுமல்லத்தேகசாட்சியாய்ச்சொல்லக் காட்டப்படாத சித்ரூபமாகவுன்னையறி. ()

சரீரத்தை வேறாக அறிந்து சிற்கனையிலே பொருந்தியிருந்து பின்னையொன்றும் நினையாமலிருந்தால் அப்போதே பந்தம்விடபட்டுச் சுகத்தையுஞ் சாந்தியுமடையும் (ச).

நீ பஞ்சபூதமுமல்ல இந்திரியங்களா லறியப்படுகிறவனு மல்ல நீ அசங்கன் நிராகாரனிந்தப் பிரபஞ்சத்துக்குச் சாட்சி நீ இனியென்னசொல்லவேண்டும். (ரு)

அதர்மந் தருமஞ் சுகந் துக்கம் மனதிலே அடக்கி நீகர்த்தாவும் அல்லாமல்போக்தாவும் அல்லாமல் எப்போதும் முக்கியமாகவேயிரு.

சகலத்துக்கும் வெதிர்த்தமாகயிருக்கிரவனொருத்தனே நீ எப்போதும்முத்தனேஇப்படியிருந்துமோகத்தினுலும்வேறேதிருக்குண்டென்றுநினைத்ததே யுனக்குப் பந்தமுண்டாயிற்று (எ)

நான்கருத்தாவென்கிற அகங்காரசர்ப்பத்துக்கு ஏன்பயப்பிடவேண்டும் நான் எதுக்குங்கருத்தா வல்லவென்கின்ற அமிர்தத்தைப்பானம்பண்ணிச்சும்மாவிரு. (அ)

நானொருத்தனே நிச்சயமாகவிமலபோத சொரூபமென்கின்ற அக்கினியினுலே தொய்தமென்கின்ற காட்டைச்சுட்டுப்போட்டுச்சோகபயத்தைவிட்டுச்சுகத்தைஅடையும் பிள்ளாய் (கூ)

எந்தவஸ்த்துவிலே ரச்சுசற்பம்போலே இந்தபிரபஞ்சங்காணப்படுகிறதோ அந்தப்பரமானந்தமாய் பிரகாசிக்கின்ற நிசசொரூபமே நீ அதுவே நாமென்று சுகமாயிரு. (க0)

எப்போதுமாங்கரமில்லாத நீ பெத்தனென்கின்ற அபிமானத்தினுலே பெத்தனும் முத்தனென்கின்ற அபிமானத்தினுலே முத்தனுமாய் மனதெந்தப்படி நினைத்ததோ அந்தப்படியாம். (கக)

ஆத்மாவொருத்தனே, பூரணன், சாக்ஷி, சித்து, விபு, அக்கிரியன், அசங்கன், சாந்தன், இச்சையில்லாதவன், அத்தொய்தன், ஆனந்தன், இப்படிப்பட்ட நீ இல்லாத பிராந்தியினுலே சமுசாரம்போலே ஆனுய். (கஉ)

இல்லாதபிராந்தியினுலே நீபெத்தனுனுய்அந்தவாக்கியபாவம்விட்டுவிட்டுவுன்னைக்கூடஸ்தனென்றும் அத்தொய்தனென்றுமறி. ()

வாரும்பிள்ளாய்புத்திரா நீதேகஅபிமானமென்கின்ற பாசத்தினுலே கட்டபெட்டாய் இனிநான்பிரமமென்கின்ற வாளினுலேஅந்தபாசத்தைஅறுத்துசுகத்தைஅடை. (கச)

நீ நிர்அசங்கன். எப்போதுமிச்சையில்லாதவன், சாந்தன், சொப்பிரகாசன், ஞானசொரூபன், இப்படிப்பட்டவுனக்கு சமாதியிலேயிருப்பனென்கின்றதே பந்தமல்லவோ. (கரு)

இந்தவிசுவமெல்லாமுன்னுலே யுண்டாயிற்று வுன்னிடத்திலே தரித்திருக்கின்றது நீஎப்போதுஞ்சுத்தபுத்தசொரூபம் நீ இதரசிந்தை நினையாதே. (கசு)

ஒருஅபேக்ஷையில்லாமல் விகாரமுமில்லாமல் நிற்பயனாய்நிர்மலனாய்ச்சலனமில்லாமல் அளவில்லாத புத்தியுடனே சின்மாத்திரவாசனைபண்ணு. (கஎ)

(உபதேசஅதிகாரம் முற்றிற்று.)

இரண்டாவது

ஆத்மாநுபவ அஷ்டவிம்சதி.

சாகரம் அசத்தியமென்றறிநிராகாரஞ்சத்தியமென்றுநிச்சயம்பண்ணு இந்தத்தத்துவ வுபதேசத்தினுலே மறுபடிசென்ம அருகனுகாய். (க)

கண்ணுடியிலே நிழல்காண்பித்தாற்போலவும்அந்தநிழலுக்குக்கண்ணுடியேஆதாரமானுற்போலவும் இந்தசரீரத்திலெங்கும் பரமேஸ்வரனிருந்தும்அதிலகப்படான். (உ)

ஏகமாய்ச்சர்வகெதமாய் இருக்கின்ற ஆகாசங்கடத்துக்குள்ளும் புறம்பும் என்றுமுண்டானுற்போலே நித்தியமாய் இடமில்லாதபிரமம்சகல பூதங்களினு மிருக்கின்றுர். (ந)

களங்கமில்லாமல் போதசொரூபமாய் பிரகிருதிக்கு வேறாய், சாந்தமாய், நிர்லேபனாயிருக்கின்ற நான் ஓகோ இத்தனைநாளும் மோகத்தினாலே அகப்பட்டாற்போலே ஆனேன். (௪)

நானொருத்தனே இந்தச்சரீரத்தையுஞ் ஜகத்தையும் பிரகாசிக்கப்பண்ணுகிறவன் ஆகையினாலே ஜகத்தெல்லாம்யென்னதுதானே அப்படியல்லவென்றாலும் நல்லதுதானே. (௫)

சரீரத்துடனே இந்தப் பிரபஞ்சம்விட்டு நிர்ச்சலனாய்ப் பரமாத்மாவை யறிந்துகொண்டு அதிசயமான ஆனந்தத்திலே மக்னனாகவேயிருக்கின்றேன். (௬)

தண்ணீரிலே அலை நுரை குமிழி அபின்னமாக வுண்டாகின்றாப்போல பரமாத்மாவிலே இந்தப் பிரபஞ்சம் அபின்னமாகவே வுண்டாகிறது. (௭)

நூலைவிட்டுப் பிடவையில்லாததுபோலவே விசாரிக்குமளவிற் சின்மாத்திரத்தை விடப்பிரபஞ்சமில்லை. (௮)

கரும்புரசத்தினாலேயுண்டான சர்க்கரை கரும்புரசமேயானாற்போல பூரணபோத சொரூபமாயிருக்கப்பட்ட என்னாலே பிரபஞ்சமுண்டாகப்படுகிறது. (௯)

தன்னுடைய அக்ஞானத்தினாலே ஜகத்துக்காண்பிக்கும் தன்னுடையஞானத்தினாலே ஜகத்துக்காண்பியாது தன்னுடைய பிரமையினாலே பழுதைபாம்பாய்த் தோணினது பழுதையென்றறிந்தால் பாம்பில்லாததுபோல. (௧௦)

என்னுடைய சொரூபம் சொப்பிரகாசம் இதைக்காட்டிலும் மகிகம் வேறில்லை நான் ஆனந்தன் ஆனபடியினாலே எந்தப்படிக்கி ஜகத்துவிளங்கினாலும் நானேவிளங்குகின்றேன். (௧௧)

மண்ணிலேகடம்போலவும் பொன்னிலே பூஷணம்போலவுஞ் ஜலத்திலே அலைபோலவு மென்னிடத்திலே யுண்டானஜகத்து மென்னிடத்திலே அடங்கும். (கஉ)

ஓகோ கற்பிதமான இந்தச்ஜகத்து அக்ஞானத்தினாலே என்னிடத்திலுண்டாயிற்று சுத்தியில்ரசிதம்போலவுஞ் சூரியப்பிரகாசத்திற் கண்டகானற்ஜலம்போலவும்பழுதையிற்பாம்புபோலவும். (கங)

உதயாஸ்தமனமில்லாமற் சகலஜகத்தும் நாசமானாலும்பிரமாதி ஸ்தம்பபரியந்தம் நானாயிருங்கின்ற வெனக்கு நானேநமஸ்க்காரம் பண்ணுவேன். (கச)

ஓகோ தேககாரியாயிருந்தும் போக்குவரத்தில்லாமல் இந்தஜகத்தை நானொருத்தனே வியாபித்திருக்கின்ற வெனக்குநானே நமஸ்காரம்பண்ணுவேன். (கரு)

எனக்குசமமில்லாமல் அச்சமற்றவனாய்ச்சரீரத்துடக்குஇல்லாமலிந்தப்பிரபஞ்சமெல்லா மொருத்தனே தரிக்கின்றயெனக்குநமஸ்காரம். (கசு)

ஓகோயெனக்குஇச்சிக்கவேண்டியதொன்றுமில்லை உண்டாயிருந்தாலுஞ்சகலமும் யென்னுதாகவே பிரத்தியக்ஷமாகவே அறிகிறேன் இப்படிபட்டயெனக்குநானேநமஸ்காரம். (கஎ)

அறிகிறதும் அறியபட்டதும் அறிகிறவனும் இந்தமூன்றும்சகதிஷ்டியினாலே பார்க்கசேயில்லை அக்ஞானத்தினாலேஉண்டென்கின்றதெல்லாம்நிரஞ்சனன் ஆனபடியினாலேநானாகவேயிருந்தேன். (கஅ)

ஓகோ தொய்தமூலாஞ்ஞானம் துக்கம் அதுக்கொரு மருந்துண்டு அதென்னவென்றாற் றிரிசியமெல்லாம் பொய் நான் சித்ரூபமான அமலனென்றறிகின்றது. (ககூ)

நான் ஞானமாத்திரம் இந்தஉபாதியெனக்கு அக்ஞானத்தினாலுண்டாயிற்றுஎன்று சிந்திக்கின்ற விசாரமேயெனக்கு நிருவிகற்பத்திலே இருக்கின்றதாயிற்று. (௨௰)

ஓகோஇந்த விசுவமெல்லாம் என்னிடத்திலேதானே இருக்கின்றது. எதார்த்தமாகஇல்லை எனக்குப் பந்தமுமில்லை மோட்சமுமில்லை நான் நிருமலனானபடியினால் ஒன்றிலும் பற்றுதலுமில்லைப் பிரமையுமில்லை. (௨௧)

இந்தச்சரீரமுஞ் ஜகத்துமெனக்குச் சற்றுகிலும் நிச்சயமாகவில்லைச் சுத்தசின்மாத்திரமான ஆத்மா நான்தானே ஆகையினாலொருகற்பனையுமெனக்கில்லை. (௨௨)

சரீரஞ் சொர்க்கநரகம் பெந்தமோட்சம் சிந்தை பயஞ் சுகம் இதுவெல்லாங் கற்பனைமாத்திரம் இதனுடைய காரியஞ் சச்சிதானந்தமான எனக்கு எம்மாத்திரம். (௨௩)

ஓகோ தொய்தமில்லாத எனக்கு ஜனமத்தியிலேயுஞ் ஜனங்களில்லாத காடுபோல வேறே நான் என்ன இச்சிக்கப் போகிறேன்.

நான் சரீரமுமல்ல எனக்குச் சரீரமுமில்லை நான்ஜீவனுமல்ல நான் சின்மயன் இதுவேவித்தெளிவு ஆகையினாலே நாசமடைகிற ஜீவன் இச்சையேன் செய்யவேண்டும். (௨௫)

ஆனந்தசமுத்திரமாயிருக்கின்றவென்னிடத்திலே சித்தமென்கின்ற வாயுவினாலே நானாபுலன்களென்கின்ற அலைகள் விசித்திரமாகக் கற்பிக்கப்பட்டது. (௨௬)

ஆனந்தசமுத்திரமாயிருக்கின்றவென்னிடத்திலே மனமென்கின்ற வாயுவடங்கினால் ஆணியுண்டான ஜீவவியாபாரி ஜகத்தென்கின்ற ஓடத்துடனேகூடி அமிழ்ந்திப்போனான். (௨௭)

ஆனந்தசமுத்திரமாயிருக்கின்ற வென்னிடத்திலே ஜீவனென்கின்ற அலையுண்டாயிருந்தும் அடங்கிப்போகிறது அதினுடையசுபாவமென நினைக்கவேண்டும். (உஅ)

(ஆத்மாநுபவ அஷ்டவிம்சதி முற்றிற்று.)

மூன்றாவது

உபதேசசதுர்த்தெசம்.

ஆத்மாவொருத்தரே நாசமில்லாதவரென்றறிந்துபிரமக்ஞானநிரனுயிருக்கின்றவனுக்கு விருதாவிருதாஅபேக்ஷையேனுண்டாம் (க)

ஒகோதன்னுடைய அக்ஞானமகிமையினலே விஷயங்களிலே விருதாப்பிரமை தோன்றிற்று கிளிஞ்சலானது ஞானமில்லாதவனுக்கு வெள்ளியென்று ஆசைதோணினற்போல. (உ)

சமுத்திரத்திலே அலைகாண்பித்தாற்போல எந்தவஸ்துவிலேஇந்தவிசுவங்காண்பிக்கிறதோ அந்தவஸ்து நீயாயிருந்தும் அதின் விருத்தியினலே ஏன்தாபப்படுகின்றாய். (ங)

தன்னைமனோகரமான சுத்த சைதன்னியமென்றுகேட்டும் பிறக்கிறதுமிறக்கிறதுமான பந்தத்தினலே பாவத்தையடைகிற மநுடன் தன்னுடைய அக்ஞானம் தெரியமாட்டாமல் விருதாவிலே கெட்டுப்போகிறன். (சு)

சகல பூதங்களிலேயுந் தானே இருக்கின்றான் பூதகணங்களெல்லாந் தன்னிடத்திலே இருக்கின்றது இப்படியிருந்தும் முனீஸ்பரரே அறிவில்லாதயேயுன்தான் வேறென்று நினைப்பான். (ரு)

பரமார்த்த அத்தொய்தத்தை மனதிலே விசாரித்த மநுடன் கருமவசனுய் ஐயோ ஏன் சலனப்படப்போரான் (சு)

விபரீதக் ஞானமென்கின்ற சிநேகத்துடனே கூடி மந்தப்புத்திக்காரன் சத்துவங்கெட்டு யென்நேரமுங் காமமே இச்சிப்பன் நல்லபுத்தியுண்டானவன் அதைத்திரணமாக மனதிலேநினைப்பன். (எ)

இகலோகபரலோக பலத்தியாகமும் நிர்மலசித்தமும் நித்தியாநித்திய வஸ்துவிவேகமும் உண்டானவனுக்கு மோக்ஷசிந்தையே அதிகமாம். (அ)

தயிரியமுண்டானவன் போகத்தையடைந்தாலும் அனேகதுக்கத்தையடைந்தாலுந் தன்னை நன்ருக வேறென் றறிந்து சந்தோஷமுங் கோபமுமில்லாமலே யிருப்பன். (கூ)

ஆத்மக்ஞானியானவன் தன்னுடையதேகமன்னியமாய்ப் பார்த்துத் துதிநிந்தைகளிலே சந்தோஷமுங் கலக்கமுமில்லாதிருப்பன்.

உற்பத்தியுண்டான இந்தத் திரிசியத்தைச் சகசமாகப்பாரான் இது ஆகுமென்றும் இது அல்லவென்று மொன்றையும் நினையான்.

மனதிலே இச்சையில்லாமல் ஞானமிர்தத்திலே திருப்தியடைந்த மகாத்மாவுக்குச் சரியாக வொருத்தருமில்லை. (கஉ)

நினைப்பெல்லாம்விட்டு நிர்த்தொந்தனாய்ஞானசீலனாய்இருக்கின்றவனுக்குத்தனக்குத்தானேவந்தபோகத்திலே சுகதுக்கங்களில்லை. ()

ஒருசுலோகம் அபாவமென்றறியவேண்டியது.

(மூன்ருவதுவுபதேசசதுர்த்தெசம் முற்றிற்று.)

நான்காவது

உல்லாசசட்கம்.

ஆத்மக்ஞானியாயிருக்கின்ற தீரன் அதிபோகங்களை அநுபவித்துக்கொணிடிருந்து மூடஜனங்களுடனே கூடிக்கோரசமுசாரமென்கின்ற நதியிலே அமிழ்ந்திப்போகான். (க)

எந்தப்பதத்தையடையமாட்டாமற் பிரமஇந்திராதிதேவதைகள் அத்தியந்த தயினியாளா யிருப்பார்களோ அப்படிபட்ட பதத்தைய டைந்தும் யோகீஸ்பரனுனவன் அதிற்சந்தோஷமடையான்.(உ)

பிரமக்ஞானியைப்புண்ணியபாவபலங்கள் தொடரமாட்டாது நிர்மலாகாசத்தைப் புகைதொடராததுபோல. (ங)

இந்தவிசுவமெல்லாம் ஆத்மாவாகவே யறிந்தமகாத்மா எப்படி நடந்தாலும் அவருக்குவிதிநிஷேதஞ் சற்றுமில்லை. (ச)

பிரமாதிஸ்தம்பபரியந்தமான சதுர்த்தச பூதங்களிலேயுஞ்சற்று ம்பிரியாப்பிரியமில்லாமல் ஞானிசுகமாகவேசஞ்சரிப்பன். (ரு)

ஞானத்தொய்தன் ஜகத்துக்கெல்லாம் நானே ஈஸ்வரனென்றறி ந்து திடநிச்சியனாய் அத்தைவிடாம லிருக்கின்றவனுக்குப் பலபந்த பயம்வராது. (சா)

(நான்காவது உல்லாசசட்கம் முற்றிற்று.)

ஐந்தாவது,

லயசதுஷ்க்கம்.

நீ விமலன் உனக்கொருசங்கமுமில்லை இந்தப்பிரபஞ்சமெல்லா ம் விடவேண்டுமென்று நினைத்தால் பிரமத்தினிடத்தி லயமாகவே ண்டும். (க)

உன்னாலுண்டான ஜகத்து சமுத்திரத்திற் குமிழிபோலென் றறிந்து உன்னை யொருத்தனாகவே பாவித்துப் பரதத்துவத்திலே லய மடையவும். (உ)

பிரத்தியக்ஷமாக இருந்தும் பார்க்க அசத்தியமாய்ப் போகிறது ஆகையால் ஜகத்தே உன்னிடத்திலே இல்லை அதெப்படியென்றால் ரச்சுசர்ப்பம்போல ஆகையால் அதைவிட்டு லயத்தையடையவும்.()

சுகதுக்கம் வந்ததிலும் ஆசை நிராசையிலுங் கிட்டிவர்த மிருத்துவினிடத்திலுஞ் சமனாய் லயத்தையடையவும். (௪)

(ஐந்தாவது லயசதுஷ்க்கம் முற்றிற்று)

ஆறாவது.

உபதேச சதுஷ்க்கம்.

நான் ஆனந்தன் ஆகாசத்தை மேகம்மூடினாற்போல இந்தச்ஜகத்து என்னை மூடித்தெதன்கின்ற விக்ஞான யுத்தனானவுனக்கு விடுகிறது கிறிகிக்கின்றது லயம் இதுமூன்றுமில்லை. (௧)

நான் மகாசமுத்திரம்போலே யிருக்கின்றவன் இந்தப்பிரபஞ்சம் அலைகள்போலே காண்பிக்கிறதென்கின்ற விக்ஞானயுத்தனானவுனக்குத் தியாகமுமில்லைக் கிறிகிக்கிறதுமில்லை லயமுமில்லை. (௨)

நான் சுத்திபோலே யிருக்கின்றேன் என்னிடத்தில் இந்தச் சகத்து ரசிதம்போற் றோணுகிறதென்கின்ற விக்ஞான யுத்தனானவுனக்கு விடுகிறது கிறிகிக்கின்றதுலயம் இந்த மூன்றுமில்லை. (௩)

நான்சகல பூதங்களிலேயும் இருக்கின்றேன் என்னிடத்திற் சகலபூதங்களுமிருக்கின்றனவென்கின்ற விக்ஞானயுத்தனானவுனக்குவிடுகிறது கிறிகிக்கின்றது லயம் இந்த மூன்றுமில்லை. (௪)

(ஆறாவது வுபதேசசதுஷ்க்கம் முற்றிற்று.)

ஏழாவது

அநுபவபஞ்சகம்.

ஆனந்தமாய் மகாசமுத்திரமென்னப்பட்ட என்னிடத்திலே விசுவமென்கின்ற ஓடம் மனதென்கின்ற வாயுவினாலே யெப்போதுந்

திரிகின்றது பார்க்கப்போனாற் பேர்மாத்திரமேயல்லாமல் சற்றுமி ல்லை. (க)

ஆனந்தமாய் மகாசமுத்திரமென்னபட்ட என்னிடத்திற் பிரப ஞ்சமென்கின்ற அலைகள் உற்பத்திலயத்தைதயடைந்தாலடையப்படும் எனக்குற்பத்தி நாசமில்லை. (உ)

ஆனந்தமாய் மகாசமுத்திரமென்னபட்ட என்னிடத்திற் பிரப ஞ்சமென்கின்றது கற்பனையென்றறிந்து சாந்தனு யெப்போதும் நிராகாரனுகவே யிருப்பேன். (ங)

பிரமம் சத்தைஅல்லாமல் பாவமேயில்லை அந்தபிரமம் நிரஞ்ச னமாய்ஆனந்தமாயிருக்கிறதென்று இச்சையிலே ஆசக்தியில்லாமல் நான்உபசாந்தியடைந்திருக்கின்றேன். (ச)

ஓகோ நான் சின்மாத்திரசொரூபன் நானேயிந்தஜகத்து இந்திர சாலம்போலே இருக்கின்றது இப்படிநிருலேபனை எனக்குக் கிறி கிக்கிறது விடுகிறதென்கிற கற்பனையேஇல்லை. (ரு)

(ஏழாவதுஅநுபவபஞ்சகம் முற்றிற்று.)

எட்டாவது,

பந்தமோக்ஷசதுஷ்க்கம்.

கிரிசியத்தினற் சித்தமுண்டானால்ப்போது பந்தமுண்டாம் கிரி சியத்தில் மனமில்லாவிட்டா லப்போது முத்தியுண்டாம். (க)

எப்போதானுலென்ன சிந்திக்கிறதும் இச்சிக்கிறதும் அங்கலாய் க்கிறதுங் கிறிகிக்கிறதும் விடுகிறதும் சந்தோஷிக்கிறதும் துக்கிக்கிற துந் தயிரியமில்லாமற்போகிறதும் உண்டாகிறதோ அப்போது பந் தம் பிராந்தியாம். (உ)

எப்போதானுலென்ன மனதி லிச்சிக்காமற் றயிரியப்படாமற் சந்தோஷ துக்கமில்லாமற் ஜீவசலனமில்லாமற் கோபமில்லாமலிருக்கிறதோ அப்போது முத்திப்பிராந்தியாம். (ங)

எப்போதானுலென்ன நானென்கின்ற தில்லாமற் போகின்றதோ அப்போதே மோக்ஷம் நானென்கின்றதே பந்தம் விவேகியானவா ளிதை யறிந்து வொன்றைக் கிறிகிக்கிறதுமில்லை விடுகிறதுமில்லை இச்சையில்லாதவனுனபடியினுலே. (ச)

(எட்டாவது பந்தமோக்ஷசதுஷ்க்கம் முற்றிற்று.)

ஒன்பதாவது,

நிர்வேதனையஷ்டகம்.

செய்தாலுஞ் செய்யாமலிருந்தாலுந் தொந்தங்களிலே சாந்தமெவன் அடைகின்றுனே அந்தப்படி நீயும் எப்போதுந் தியாகபரனுயிருக்கின்ற விரதமாயிரு. (க)

இந்தச்ஜகத்து அத்தியந்தஞ் சஞ்சலம் நிட்சாரம் அநித்தியம் தாபத்திரயங்களினுற் றூஷிக்கப்பட்டது துக்கரூபமென்று நிச்சயித்துச் சாந்தமடையவும். (உ)

காலமும்வயதுந் தொந்தமுந் தனக்கெப்படியுண்டாமென்றுசித்தியடைந்த தத்துவக்ஞானி எதாஇச்சையாக சஞ்சரிப்பன் (ங)

என்தகப்பனேகேள்? எவனுக்கானுலென்னஇந்தலோகபிரவர்த்தனைபாற்கின்றபோது சீவனத்துமேலேசிந்தையும் போகத்துமேலே இச்சையும்இமில்லாமலிருக்கின்றதேமகாஆச்சரியம். (ச)

எதீஸ்சுராளுக்கும் யோகீஸ்சுராளுக்கும்மதங்கள்நானுவிதமாகயிருக்கும் அதுவெல்லாம் பார்த்து மநுடனுனவன் வேதனைஇல்லாமற் சாந்தியடையாமலிருப்பானே. (ரு)

தேகத்துவமெல்லாமறிந்த சேதனத்துக்குக் குருவேதுக்கு என்றறிந்தமறுடன் தன்னைசேர்ந்தவனை தரிக்கவேபண்ணுவான். (சு)

பஞ்சபூதத்திலேகற்ப்பிக்கபட்ட விகாரங்களெல்லாம் புத்தியிலேயன்றாக அறிந்து தொந்தங்களை நீவிட்டதேயுண்டானற் சோதிசொரூபக்ஞானம் உனக்கு இப்போதேயுண்டாம். (எ)

வாசனையேசமுசாரம் வாசனையடங்கினதேமுத்தி ஆகையினால் வாசனையை யடக்கி யதார்த்தமாகஇருக்கின்றவனே மகாத்மா. (அ)

(ஒன்பதாவது நிர்வேதனையஷ்டகம் முற்றிற்று.)

பத்தாவது

உபசமன அஷ்டகம்.

அர்த்தமானது அனர்த்தமூலம் மாயாசொருபம்அதிலுஞ்சத்துருகாமம் இதுஇரண்டும் விருதாவென்று விட்டு விட்டு எப்போதும்இதைஅனுதரவுசெய்யவேண்டும். (க)

சேத்திரம்கிரகஞ் சினேகிதாள் பாரி தனசம்பத்து இது முதலானதெல்லாஞ் சொற்பனமாத்திரம் இந்திரஜாலம்போலே இன்றைக்கோ நாளைக்கோ நாளைநன்றைக்கோ தெரியக்கூடாது. (உ)

எதின் எதின்பேரி லாசையுண்டாகிறதோ அது அது சமுசாரம் அதுக்குத் திடவைராக்கியம் அடைந்து ஆசையைவிட்டுச் சுகத்தையடையவும். (ங)

ஆசையே பந்தம் ஆசைவிடுகின்றதே மோக்ஷம் ஆகையால் ஆத்மக்ஞானிக்கி ஆசைவிட்டதே சந்தோஷம். (ச)

நித்தியசுத்த சேதனன் ஜகத்து அசத்துச் சடம் உனக்கவித்தையுமில்லை ஆசையுமில்லை நீ நிர்மலன். (ரு)

இராச்சியம் புத்திரகளத்திரஞ்சுகங்கள்முதலானது சரீரம்விடுகின்றபோது சங்கமாயிருந்தவனுக்குச் செனமசென்மத்துக்குத்துக்மே கொடுக்கும். (சு)

அர்த்தங்காமஞ்சுகிர்தங்கரும் முதலானதும் போதும் போதும் இதனுலே சமுசாரதாபம்விடாமல் மனதுசாந்தியும் அடையமாட்டாது. (எ)

மனவாக்குக்காயங்களினுலே நான்இச்சைபண்ணி ஆயாசமுந் துக்கமுங் கொடுக்கின்றகன்மம் நான்ஒருக்காலுஞ் செய்கின்றதில்லை என்று நிச்சயித்து நித்தியசுகத்தையடையவும். (அ)

(பத்தாவதுஉபசமன அஷ்டகம் முற்றிற்று.)

பதினோராவது

ஞான அஷடட்கம்.

பாவாபாவமில்லாமற் பரமாத்மாவானவஸ்த்து ஸொபாவமாக வேபிரகாசிக்கிறதென்றறிந்தமகாத்துமா ஒருவிகாரமும் ஒருவிசாரத்தையும் அடையாமற்சுகிப்பன். (க)

ஈஷ்வரனேசகலத்தையும் நிர்மிக்கின்றவன் அவரைத்தவிரசற்றுகிலும்இல்லை இது நிச்சயமென்றுசகலஆசையும் விட்டுவிட்டபரமசாந்தன் பந்தத்தையடையான். (உ)

ஆபத்துவந்தாலுஞ் சம்பத்துவந்தாலுந் தெய்வயெத்தனமென்றுதிருப்தனுய் சிதேந்திரியனுயிருங்கின்றவன் சுகதுக்கங்களிலே அகப்படான். (ங)

சுகதுக்கம் செனமம் மிருத்துதோணினுலுந் தெய்வயெத்தனமென்றுமெய்யாக அறிந்து யத்தனமும் ஆயாசமும்மில்லாமற்கருமம்பண்ணினுலுங் கருமபலத்தையடையான். (ச)

சிந்தையினாலே துக்கம்வருமேயல்லால் துக்கத்துக்குவேறே வர வழியில்லைஆகையினாற் சிந்தையைவிட்டு இச்சையிலே அகப்படாமற் சாந்தனானவன் திடசுகத்தையடைவன். (ரு)

நான்தேகமுமல்லஎனக்குத்தேகமுமில்லை என்றறிந்தவன் ஒருகாரியஞ்செய்ததும் செய்யாததும் இரண்டும் நினையாமற் கேவலம்சுகத்தையடைவான். (சு)

பிரமாதிஸ்தம்ப பரியந்தம் நானே என்கின்ற நிச்சயாத்மாவானவன் பிரார்த்திய பிரார்த்தி பலத்திலே அகப்படான். (எ)

வெகுவிதமாய் ஆச்சரியமாயிருக்கின்ற இந்தப்பிரபஞ்சமெல்லாமொன்றுமில்லையென்று பயம்விட்டுப்போயிருக்கின்றவன் வாசனையிலே அகப்படாமற் சுத்தஞானசொரூபனாக இருப்பன். (அ)

(பதினொருவது ஞானஅஷ்டகம் முற்றிற்று.)

பன்னிரெண்டாவது

ஏவமேவாஅஷ்டகம்.

தேகமானது சிறிதுகாலங் கிறியாரூபமாயிருக்கும் அதின்பிறகு வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கும் அதின்பிறகு சிந்தனைபண்ணும் அதுயெப்படி யிருந்தாலும் நான் அப்படியிருந்தேன். (க)

பிரிதியில்லாதிருந்தால் ஆத்மாவுக்குச் சத்தாவிருத்தியில்லை அதிசயமானபடியினாலே அதைஅறிந்து யேகாக்கிரசித்தனாய் நானொன்றும் அறியாமலிப்படியே யிருக்கின்றேன். (உ)

ஆச்சிரமம் அனாச்சிரமம் யில்லாத தியான நிஷ்டையிலே சித்தத்திலே தாரணையும் விட்டுவிட்டு ஒருவிகற்பமுமில்லாமல் ஒருத்தனாய்ச் சுகமாய் நானிப்படியே யிருக்கின்றேன் (ங)

சிந்திக்கப்படாத வஸ்து வைச் சிந்திக்கின்றேனென்கின்றவனே சிந்தையுடனேகூடினவன் அந்த ஆயாசபாவனையைவிட்டு நானிப்படியே யிருக்கின்றேன். (ச)

இப்படிஎவனாலே அநுபவிக்கப்பட்டதோ அவனே கிருதார்த்தன் இப்படிப்பட்ட சுபாவமுண்டானவனே மகாபுத்தியுண்டானவன்.

இவையில்மூன்றுசுலோகம்அபாவமென்றறிக.

(பன்னிரெண்டாவதுஏவமேவாஅஷ்டகம் முற்றிற்று.)

பதின்மூன்றுவது
இதாசுகசத்தகம்.

தன் ஐஸ்வரியங்கௌபீனமுதலாய்இல்லாததாகையாற் தியாகந்தானமிரண்டும் விட்டுப்போட்டு நான்யிதரசுகத்தை அடைந்திருக்கின்றேன். (க)

பார்க்கிறது யெதையாகிலும் பார்க்கட்டும் சிங்நுவை யெதையாகிலுமிச்சிக்கட்டும் சித்தம்யெதையாகிலுஞ் சிந்திக்கட்டு மிதுக்கெல்லாம் வேறாய் தத்துவத்திலே நான் சுகித்துக்கொண் டிதரசுகமாயிருக்கின்றேன். (உ)

நான்செய்யவேண்டியதொன்றுங் காணேனென்கின்ற நிச்சயத்தினாலே ஒன்றிலுமிச்சையில்லாமற் றனக்குத்தானே வந்ததாகையினாலே நானென்கின்ற அபிமானமில்லாமல் புசித்துச் சுகமாகஇருக்கின்றேன். (ங)

தேகாபிமானமுண்டானயோகி கருமபந்தத்தினாலேகட்டுப்படுவன் அப்படி வியோகம் அபியோகமிரண்டு மில்லாமல்நான்சுகமாயிருக்கின்றேன். (ச)

எப்போதும் பந்தமில்லாமலிருக்கின்ற எனக்கு அருத்தமுமில்லை அனர்த்தமுமில்லை நடக்கச்சே இருக்கச்சே நித்திரை போகச்சேயும் நான் இதரசுகமாயிருக்கின்றேன். (ரு)

போகச்சே எனக்கு ஆனியுமில்லை எத்தனம்பண்ணுகின்றதிலே எனக்குச்சித்தியுமில்லை ஆகையால் நட்டமும் லாபமுமில்லாமலே யிதரசுகமாயிருக்கின்றேன். (சு)

சுகமுதலான ரூபாதிகளுடைய பாவம் விசாரித்துப்பார்த்து அதிலேசுபாசுபங்கள்விட்டுநான்இதரசுகத்தை அடைந்திருக்கின்றேன்.()

(பதின்மூன்றாவது இதரசுகசத்தகம் முற்றிற்று.)

பதினான்காவது
சாந்திசதுஷ்க்கம்.

பாவமெல்லாம் அக்ஞானபாவமென்றறிந்து நித்திரையிலே விழித்திருக்கின்றாப்போலே சமுசாரமில்லாமலே இருக்கின்றேன். ()

தானமேது சினேகிதாளேது விஷயமேது சாஸ்திரமேது விக்ஞானமேது இதுகளுடைய மகத்துவமெல்லாமறிந்து வாஞ்சைவிட்டயெனக்கு. (உ)

சாக்ஷியும் புருஷனுமாய்ப் பரமாத்மாவான ஈஸ்வரனை யறியச்சே பந்தமோக்ஷம் இரண்டுமில்லாதே போயிற்று முக்திக்காகச் சிந்தனை ஏதுக்கு. (ந).

உள்ளே ஒருவிகற்பமுமில்லாமல் வெளியிலே இதர இச்சையாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றவனுடையசுபாவத்தைஅப்படிப்பட்டவன் அறிவானே அல்லாமற் பின்னையொருத்தன் அறியமாட்டான். (ச)

(பதினான்காவது சாந்திசதுஷ்க்கம் முற்றிற்று.)

பதினைந்தாவது
தத்துவவுபதேசவிம்சதி.

உள்ளபடி மகாத்மாவினுடைய தத்துவ உபதேசத்தினாலே தத்துவபுத்தி யுண்டானவனாய்க் கிருதார்த்தனானவன் தானாகச் ஜீவபரியந்தம் விசாரித்தாலு மறியமாட்டான். (க)

விஷயத்தைவிட்டதேமோக்ஷம் விஷயத்திற்கூடுகின்றதேபந்தம் இதுவே விசேஷஞானம் இதிலே உனக்குயெப்படித் தோணிற்றோ அப்படியேசெய். (உ)

நன்றாகப்பேசுகின்றவன் பிறக்ஞையுண்டானவன் நன்றாகஉத்தியோகம்செய்கின்றவன்இப்படிக்கொத்தவனை ஊமைபோலவும், பேயன்போலவும் இப்படிப்பண்ணும் தத்துவக்ஞானம் அவனைப் பிறகிருதாள் தங்களிலே கூட்டார்கள். (ங)

நீ சரீரமுமல்லஉனக்குச்சரீரமுமில்லை நீ கருத்தாவுமல்லப்போக்தாவுமல்ல நீ விசுவசாக்ஷி நீ சித்துரூபனா யாசையில்லாமற் சுகமாயிரு. (ச)

இராகத்துவேஷம்மனோதர்மம் உனக்குமனதுமில்லைவிகற்பமுமில்லை நீ போதசொரூபன் ஆகையால் விகாரமில்லாத சுகத்தைஅடை. (ரு)

பூதங்களிலே தானிருக்கின்றேனென்றுந் தன்னிடத்திற் பூதங்களிருக்கிறதென்றுமறிந்து அகங்காரமும்மமதையும் விட்டுசுகத்தை அடையவும். (சு)

சமுத்திரத்திற் றிவலைகள்போலே எந்தவஸ்துவிலே இந்தச் ஜகத்துத் தோணிற்றோ அந்தவஸ்துவேநீ நீயேஞான சொரூபன் இதுவேசத்தியம் உன்மனதிலே தாபம்விட்டுவிடு. (எ)

தகப்பனேநன்முகத் திரிவிதகரணத்தினும் விசுவாசம்வை இதி
ற்சமுசயமில்லை நீ சின்மாத்திரசொரூபன் பகவந்தனன் நீ மாயை
க்கி அப்பாற்பட்ட ஆத்மா. (அ)

சரீரங்குணத்துடனே கூடினது வருகிறதும் போகிறதுமா யிரு
க்கும் ஆத்மா போக்குவரத்தற்றவர் இதிலே ஏன் விசாரப்பட வேண்
டும் தேகங்கற்பாந்திரமா இருக்கட்டும் அல்லது இப்போதேபோகட்
டுஞ் சின்மாத்திரசொரூபமா யிருக்கின்ற உனக்கு ஆனிலாபமில்லை.

ஆனந்தசமுத்திரமாயிருக்கப்பட்ட உன்னிடத்திலே ஜகத்தெ
ன்கின்ற அலையுண்டானாலும் லயமுண்டானாலும் உனக்கு ஆனிலா
பமில்லாமலே இருப்பாய். (கo)

தகப்பனே சின்மாத்திரசொரூபமா யிருக்கின்ற உனக்குச் ஜக
த்துச் சின்மாத்திர சொரூபமேயல்லாமல் வேறல்ல இப்படிப்பட்ட
உனக்கு வற்சிதம் அவற்சிதம் யெப்படிவரப்போகிறது. (கக)

ஒருத்தனுய் அவ்வியனுய்ச் சாந்தனுய்ச் சிதாகாசமாயிருக்கின்ற
உனக்குச்சென்மமுமில்லைக் கருமமுமில்லை அகங்காரமுமில்லை. (கஉ)

நீ யென்னத்தைகண்டாலுமதிலே நீ யொருத்தனே தோனுகி
ன்றுயல்லாமல் உன்னைத்தவிரச் சொர்னத்தைத்தவிரப் பூஷணம்
வேறல்லாததுபோல. (கரு)

இவனவனனது இதுவென்கின்ற விகாரமெல்லாம் விட்டுச்சக
லமும் ஆத்மாவேயென்கின்ற நிச்சயத்தினலே சங்கற்பதேசில்லாமற்
சுகமாயிரு. (கச)

உன்னுடைய அக்ஞானத்தினலே ஜகத்துண்டாயிற்று பரமா
ர்த்தனக நீ யொருத்தனே சரிஆகையாற் சமுசாரியும் அசமுசாரியு
ம் நீ யொருத்தனே. (கரு)

இந்தப்பிரபஞ்சம் பிரம்மமாத்திரமே யல்லாமல் வேறொன்றுங் காணேன் ஆகையால் நீ யொருவாசனையோடுங்கூடாமற் சின்மாத்திரமாய்ச் சுகமாயிரு. (கசு)

தம்பி நீயொருத்தனே சமுசாரமென்கின்ற சமுத்திரத்திலே முன்னுமிருக்கின்றாய் இப்போதுமிருக்கின்றாயினிமேலுமிருக்கப் போகிறாயாகையாலுனக்கு பெந்தமோக்ஷங்களேயில்லை நீ கிருதகிறுத்தியனேசரி. (கஎ)

சின்மயமாயிருக்கின்ற சித்தம்சங்கற்பங்களினாலே அலைப்பிக்காமல் அகங்காரம்விட்டு ஆனந்தசொரூபமாய்ச்சுகமாகயிரு. (கஅ)

நீ யெச்சரிக்கையாயிருவென்றும்மனதிலேநினையாதே சத்தியமாய்ச்சொல்லுகின்றேன் நீயே ஆத்மசொரூபம் நீயே முக்தன் இனி அறிகின்றதென்னசெய்கின்றதென்ன. (கக)

(பதினைந்தாவது தத்துவவுபதேசவிம்சதி முற்றிற்று.)

ஒருசுலோகம்அபாவமெனஅறியவேண்டியது-

பதினாறுவது
உபதேசயேகாதேசம்.

தகப்பனே தினந்தோறும் நானாசாஸ்திரம் பார்த்தாலுங் கேட்டாலுஞ் சொன்னாலு முனக்குச்சாந்தி வரப்போகிறதில்லை ஆனபடியால் மனதிலேநினைக்கின்றது மறந்தாலொழிய சித்தத்திலே இச்சையான்துவிட்டுநிர்மல ஞானியாக யிருந்துகொண்டு கர்மஞ்செய்தாலும் யோகத்திலே யிருந்தாலுஞ் சமாதியிலேயிருந்தாலும் நல்லது.()

ஆயாசத்தினாலே துக்கஞ் சகலமும் இராகவசமாயிருக்கு மிதை மூடன் அறியான் விவேகியானவன் ஆயாசமில்லாமல் நாசமில்லாத பதத்தை யடைவான். (உ)

நிமிஷாநிமிஷமானாலும் வியாபாரம்விட்டு துக்கமில்லாமலெவனிருக்கின்றானோ அவனுக்குச் சுகமுண்டு வியாபாரத்துடனே கூடினவனுக்கு ஒருக்காலுஞ்சுகமில்லை. (௩)

இதுபண்ணினேன் பண்ணவில்லை யென்கின்றதோ தொந்தம் எப்போமனதிலே இல்லாமற்போயிற்றோ அப்போது அந்தமனதுக்குத் தருமாதருமகருமமோக்ஷங்களுமில்லை. (௪)

விரக்தன்விஷயங்களுடனே கூடான் ராகியானவன் விஷயங்களைப் போகிப்பான் பந்தமோக்ஷமிரண்டுமில்லாதவன் ராகியுமல்ல விரக்தனுமல்ல. (௫)

தள்ளுகிறதிலும் கிறிகிக்கிறத்திலும் நினைவு எவ்வளவுக்கு இருக்குமோ அவ்வளவுக்கும் ஞானத்திற்கு ஆனியுண்டு அதுவேசமுசாரவிருக்ஷத்துக்கு மூலை. (௬)

பிரவிருத்திகளிலே ராகாதிகளுண்டா மதையறிந்து குழந்தைபோலே தொந்தங்களில்லாமற் சுகமாயிரு. (௭)

ராகமுண்டானவன் துக்கநிவர்த்திக்காகச் சமுசாரம்விடவேண்டுமென்று நினைப்பான் ராகமில்லாதவன் துக்கமில்லாமலேயிருந்து சமுசாரம்விடவேண்டுமென்கின்றநினைவேயில்லை. (௮)

தேகத்திலேயும் மோக்ஷத்திலேயும் மமத்துவமிருக்கின்றவன் யோகியுமல்லஞானியுமல்ல. அவேனபின்னும் துக்கமும் பெந்தமுமுண்டானவன். (௯)

அரிஅரபிரமாதிகளுனக்கு உபதேசங்கொடுத்தாலு முன்மனதிலேசகலமும்மறவாதேபோனாலுனக்குலாபமில்லை. (௧௦)

ஏகசுலோகம் அபாவமென்றறிக.

(பதினாறுவதுவிசேஷஉபதேசயோகாதேசம்முற்றிற்று.)

பதினேழாவது
தத்துவஉபதேசவிம்சதி.

திருப்தியடைந்தவன் இந்திரியசெயமுண்டானவன் ஆசையில்லாததத்துவசமனன் ஏகாங்கியாய் யாதொருத்த னிருக்கின்றானோ அந்தஞானி ஒருத்தருக்கு மெட்டப்படாத யோகஞான பலத்தையடைவான். (க)

இந்தஜகத்திலே தத்துவஞ்ஞானியானவன் விஞ்ஞானனந்தத்திலேசற்றாகிலுந் துக்கத்தை அடையான் அப்படிப்பட்டஒருத்தனாலே இந்தப்பிரமாண்டமண்டலம் பூரணமாகயிருக்கின்றது. (உ)

ஆத்மராமனா யிருக்கின்றவனை விஷயசுகஞ் சந்தோஷிக்கமாட்டாது அது எப்படியென்றால் நல்லகொழுந்துகள் தின்கின்ற யானையை வேப்பங்கொழுந்துகள் சந்தோஷிக்கப்பண்ண மாட்டாதது போலே. (ந)

அடையப்பட்டபோகங்களிலேயும் அடையப்படாத போகங்கங்களிலேயு மெவனுசத்தியில்லாம லிருக்கின்றானோ அவனே இந்தச் ஜகத்திலே கிடையாதவன். (ச)

சமுசாரியானவன் போகமெப்போவருமென்று இச்சித்திருப்பானோ அப்படியே முமுட்சுமோக்ஷமெப்போதுவருமென்று இச்சிப்பன். (ரு)

போகமோக்ஷமிரண்டிலு மிச்சையில்லாதவனே சாக்ஷாத்காரமான பிரமம் அவனே மகாத்மா. (சு)

தருமார்த்தகாமமோக்ஷங்களிலும் ஜீவத்துவத்திலு மிருத்தலுங் கிறிகிக்கிறத்திலும் விடுகிறத்திலும் இச்சையில்லாம லெந்தத்

தயிரியபுருஷ னிருக்கின்றானோ அவன் இந்தலோகத்திலே கிடை யாதவன். (எ)

இந்தவிசுவமெல்லாம் லயமானாலுஞ் சந்தோஷமில்லாமல்நிறை ந்திருந்தாற் றுக்கமுமில்லாம லிப்படி மகாசுகத்தை அடைந்ததீரன் ஒருத்தனாகவேசஞ்சரிப்பன் அப்படிப்பட்ட ஞானத்திலே திருதார்த் தன் ஆசையில்லாதபுருஷன் புத்திவிகற்பமெல்லாம் விட்டுப் பார்க்கச் சே கேட்கச்சேகிராணமறியச்சே ரசனையறியச்சே ஆறுகின்ற தறி யச்சே எதார்த்த சுகத்தை அடைந்தே யிருப்பன். (அ)

சமுசாரசாகரத்தைக்கடந்திருக்கின்ற யோகிக்கு விரக்தியுமி ல்லை சந்தோஷமுமில்லை இந்திரியப் பிரவிர்த்தியுமில்லை திஷ்டியுமி ல்லை. (கூ)

நித்திரையுமில்லை சாக்கிறமுமில்லை கண்மூடுகின்றதுமில்லை துறக்கின்றதுமில்லை ஓகோ இப்படிப்பட்ட வவஸ்தை முத்திசேதன னுக்கேசொல்லும். (க0)

ஒருத்தனை நிந்திக்கிறதுமில்லை புகழ்கிறதுமில்லை சந்தோஷமு மில்லை கோபமுமில்லை கொடுக்கிறதுமில்லை வாங்கிறதுமில்லை இப் டியொன்றிலும் ஆசையில்லாதவன் ஜீவன்முக்தன். (கக)

ஜீவன்முக்தனானமகாத்துமா பிரியவஸ்துவிலே சந்தோஷியான் மிருத்து கிட்டவந்தாலுங் கலக்கப்படான் எப்போதும் யெதார்த் தமாகவே இருப்பன், (கஉ)

சர்வத்திரசமதிருஷ்டியுண்டான தீரனுக்கு புருஷனிடத்திலும் ஸ்த்திரீயினிடத்திலுஞ் சுகதுக்கம் ஆபத்துச்சம்பத்துகளினும்ஏத்தத் தாக்ஷியில்லாமற்சுகமாகஇருப்பன், (கந)

சமுசாரசீரணமான புருஷனுக்குயிமிசையுமில்லை தயையுமில்லை கிருபையுமில்லை ஈனத்துவமுமில்லை சந்தோஷமுமில்லை துக்கமுமில்லை. (கச)

சித்தமெதிலுங்கூடாத சிற்சொரூபன் விஷயமுண்டானவனுமல்ல இல்லாதவனுமல்ல பெத்தனுமல்ல முக்தனுமல்ல பிரார்த்தியானத்திற் சந்தோஷித்துக்கொண்டிருப்பன். (கரு)

சமாதானமில்லாமற் சூனியசித்தனானபுருஷன் மோக்ஷம்வந்து முன்னேநின்றாலுமறியான். (கசு)

மோகம் அகங்காரமில்லாமற் சகலத்தையும் விட்டுவிட்ட யோகீஸ்வரன் ஏதுசெய்தாலு மதின்பலத்தையடையான். (கஎ)

மனதில்லாதவனாய் மோகஞ்சொற்பனசெடத்துவமில்லாதவனாயொவ்வொரு மகாபுருஷன் மஹாத்மத்தை யறிந்து லோகத்திலே சஞ்சரிப்பன். (கஅ)

(பதினேழாவது தத்துவவுபதேச விம்சதி முற்றிற்று.)

பதினெட்டாவது.

சமம்சமன்சதகம்.

எவனுக்கு எந்தமட்டுக்கு ஞானமுதயமாகிறதோ அவ்வளவுக்குப்பிரமை சொற்பனம்போலே பிரமிக்கப்பண்ணும் அப்படிப்பட்ட கேவல சுகசொரூபமாய்ச் சாந்தமாயிருக்கின்றதே இதுக்கு நமஸ்காரம். (க)

சகலபதார்த்தங்களு மாற்சித்துத் தனக்கு வேண்டிய யோகங்களெல்லாமநுபவித்தும் புத்திவந்தனானவன் சீக்கிரமாக அதைவிட்டுவிட்டாலொழியச்சுகங்காணமாட்டான். (உ)

சமுசாரமென்கின்ற கோடைகாலத்துவெய்யலிலே தெத்தமானவனுக்கு எந்தவிதத்திலேயுஞ்சமமென்கின்ற அமிர்தவருஷத்தினுலே நனைத்தாலொழியக் குளிராமைபொருந்திச் சுகத்தை அடையமாட்டான். (௩)

ஜகத்து பாவனைமாத்திரமேஅல்லாமற் பரமார்த்தமாகப் பின்னையொன்றையுங்காணேன் பாவாபாவமெப்பேதும் விவேகித்துஅறிகிறவன் சுபாவமடைவன் ஆத்மபதத்தை அடைந்தவனுக்கும் அது தூரவுமல்லக் கிட்டவுமல்ல நிர்விகற்பம் நிராயாசம் நிராகாரம் நிரஞ்சனமாக இருக்கும். (௪)

மோகத்தைமாத்திரம் விட்டுச் சொரூபவாசனையடைந்த புத்திவந்தன் சமுசயந்தீர்ந்த தெளிவிலே சற்றுகிலும் துக்கமடையான்.()

இந்தஜகத்துக் கற்பனுமாத்திரம் ஆத்மா நித்தியமுக்தனென்று அறிந்ததீரன் சமுசயமில்லாதவனுகையால் குழந்தைபோலும் ஒன்றுலும் பற்றுதலில்லை. (௬)

தானே பிரமமென்றறிந்து உண்டானது மில்லாதது மிரண்டுங்கற்பிதமென்று நிச்சயித்து நிஷ்காமனு யிருக்கின்றவனுக்கு அறிகிறதுமில்லை சொல்லுகிறதுமில்லை கிரியையுமில்லை. (௭)

இதுநான் இதுநானல்லவென்கின்ற விகற்பமில்லாமற் சகலமும் பிரமமேயென்கிற நிச்சயத்தினுலே உத்தமமானயோகி சும்மா இருப்பன். (௮)

உபசாந்தமுண்டானயோகீசுரனுக்கு விக்ஷேபமுமில்லை விரக்தியுமில்லை தெளிவுமில்லை மூடமுமில்லை சுகமுமில்லை துக்கமுமில்லை. (௯)

தன்னுடைய ராச்சியத்திலும் பிக்ஷாவிர்த்தியினு முண்டாமை யில்லாமையிலும் சனங்களிலும் வனத்திலும் நிர்விகற்பமான யோகீசுரன் ஒன்றாகவேயிருப்பன். (க0)

தொந்தங்களில்லாத யோகிக்குத் தருமமேது அதர்ம்மமேது காமமேது விகற்பமேது இதுலபித்தது இதுலபிக்கவில்லை யென்கின்றதேது. (கக)

செய்யவேண்டிய காரியமுமில்லை மனதுக்குஇஷ்டமான காரியமுமில்லை எதாலாபமாக ஜீவனம்பண்ணிக்கொண்டு ஜீவன் முக்தனானயோகி சிற்சொரூபமாக இருப்பன். (கஉ)

சாந்தமாய்ச் சகலசங்கற்பமும் விட்டுப்போன யோகீசுரனுக்குப் பிரபஞ்சமேது மோகப்பிராந்தியேது தியானமேது முக்தியேது.()

பிரமத்தைப் பார்க்கின்ற மனதுண்டானவனுக்கு நானே பிரமமென்று சிந்திக்கலாம் இவ்வண்ணமே வஸ்துவைக்காணாத நிர்மலமனதுண்டானவன் என்னத்தைசிந்திக்கப்போறான். (கச)

ஆத்மவிட்க்ஷேபமுண்டானவன் சரீரமும்மனதும் நிரோதனம் பண்ணவேண்டும் தயிரியமுண்டானபுருஷனுக்குச் சாதிக்கவேண்டியதொன்றுமில்லை விட்க்ஷேபமுமில்லை. (கரு)

தயிரியபுருஷன் லோகவிருத்தமாய்லோகத்தார்போலே சஞ்சரிப்பன் அதுக்குள்ளானவனல்ல அவனுக்குச்சமாதியுமில்லை விட்க்ஷேபமுமில்லை. (கசு)

பாவாபாவம்றியாமலொருவாசனையோடுங் கூடாமலிருக்கின்ற யோகிலோகதிஷ்டிக்கிக்கருமஞ்செய்தாலுஞ் செய்தவனல்ல. (கஎ)

தயிரியபுருஷனுக்குப் பிரவிர்த்தி நிவிர்த்திகளிலே ஆக்கிறகமில்லைவேண்டியதைப்பண்ணிக்கொண்டு ஒன்றிலும் பற்றில்லாமற்சுகமா இருப்பன். (கஅ)

விவேகியானவன் சகலவாசனைகளிலும் விடுபட்டுபாவமில்லாமல் பந்தமுக்தனாய்ச் சுகமாகயிருந்துகொண்டு சமுசாரமென்கின்ற வாயுவினாலே காஞ்சயிலைபோலேசஞ்சரிப்பன். (கக)

சமுசார துக்கங்களாயிரம்வந்தாலுஞ் சம்பந்தங்கள் வந்தாலுஞ் சுகதுக்கங்கள் தோணுமெலெப்போதுஞ் சாந்தசித்த முண்டானவன் விதேகிபோலே பிரகாசிப்பன். (உ௦)

மனது சாந்தமடைந்து ஆத்மராமனாய்த் தயிரியபுருஷனை மகாத்மா சாகிறதும் பிழைக்கிறது மிரண்டுமில்லாமலிருப்பன். (உக)

எதார்த்தமாகச் சூனியசித்தனாய் இச்சையில்லாத தயிரியபுருஷன் என்னத்தைச்செய்தாலும் அக்ஞானிபோலே மானவமானத்திலே கட்டுப்படான். (உஉ)

சகலகருமங்களுஞ் சரீரம்பண்ணுகின்றது சுத்தசொரூபனாயிருக்கின்ற நான் ஒருகருமமும் பண்ணவில்லையென்கின்ற ஞானி சகல கருமங்களும் பண்ணியும் பண்ணாதவனே. (உ௩)

மூடன் எந்தவிதிகருமம் பண்ணினாலும் பெத்தனே அல்லாமற் கிருதகிறுத்தியனாக மாட்டான் ஜீவன்முக்தன் எந்தக்கருமம் பண்ணினாலுஞ் சுகமநுபவிப்பன். (உ௪)

புத்திவந்தனானவன் நானாவிகாரம் விட்டுக் கலக்கமில்லாமல் ஒன்றுநினையாமற் றன்மயமாய் வேறேயொன்றறியாமற் கேளாமலிருப்பன். (உரு)

சமாதியுமில்லை விட்சேபமுமில்லை தான்முமூக்ஷுவுமல்ல அன்னியனுமல்ல கற்பனைவிருத்தி நாசங்களுண்டானாலும் அகர்த்தாவானவன் எப்போதும் மகாத்மாவாகவே இருப்பன். (உகு)

உள்ளே அகங்காரத்துடனே இருக்கின்றவன் கருமஞ்செய்யாதிருந்தாலுஞ் செய்தவனே அகங்காரமில்லாததீரன் செய்துஞ்செய்யாதவனே. (உள)

முக்தனானபுருஷனுடைய சித்தங்கலங்காது அசையாதுசந்தோஷப்படாது சம்சயமிராது ஒருகருமமும்பண்ணாது. (உஅ)

தியானியாது சேஷ்டைபண்ணாது சிற்சொரூபமான சித்தம் யென்னத்துக்காகச் சேஷ்டைபண்ணுகின்றது எது நிமித்தியந் தியானம்பண்ணுகின்றது. (உகூ)

மூடனானவன்தத்துவத்தைக்கேட்டு மூடபாவத்தையேயடைவன்விவேகியானவன்சமுச்சயமுண்டானாலும் எதார்த்தமாகவேயிருப்பானேயல்லாமல் மூடன்போலேபோகான். (௩0)

மூடரானபேர் யேகாக்கிரசித்தமும் வாயுநிரோதமும்அப்பியாசமென்றுபண்ணுவார்கள் தீரபுருஷனானவன் ஒருகருமமும்பண்ணான் நித்திரையிலேசொற்பனசேட்டைபோல இருப்பன். (௩க)

மூடனானவன் எத்தனம்பண்ணினாலும் பண்ணாதிருந்தாலுமுக்தியடையமாட்டான் பிறக்ஞையுண்டானவன் தத்துவநிச்சயத்தினாலேமோக்ஷத்தையடைவான். (௩உ)

நிர்மலமாய்ப் பரிபூரணமாத்திரநிட்பிரபஞ்சனாய்ப் பிரியசொரூபனாய் ஆனந்தனாய் நிராமயனாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றபரமாத்மாவைமூடாளானபேரப்பியாசம்பண்ணியும்அறியமாட்டாள்.

அப்பியாசரூபமான கருமத்தினாலே மூடனானவன் மோக்ஷமடையமாட்டான் விவேகியானவன் ஞானமாத்திரத்தினாலே கிரியையில்லாமல் முக்தியையடைவான், (௩ச)

பிரமத்தை யடைகின்றேனென்று மூடனானவன் நினைத்து அடையமாட்டான் தீரனான புருஷனானவன் நினையாமலே பிரம சொரூபத்தையடைவான். (௩௫)

அகங்காரயுக்தமான செனங்க ளாச்சரியமில்லாமலே சமுசார விருக்ஷத்தைப் போஷணைபண்ணுவார்கள் புத்திவந்தனானவன் சமுசாரம்ஆதியந்தந் துக்கமானபடியினாலே அதினுடையமூலத்தை விவேகமென்கின்ற கோடாலியாலே வெட்டிப்போடுவார்கள். (௩௬)

மூடனானவன் எத்தனைநியமம் பண்ணினாலுஞ் சாந்தியடையமாட்டான் தீரபுருஷனானவன் தத்துவநிச்சயம் பண்ணிச் சகலத்தையுமறிந்து எப்போதுஞ் சாந்தனாயிருப்பன். (௩௭)

வாகிய திஷ்டியினாலே பிரமத்தைப் பார்ப்போமென்கிறவனுடைய எத்தனம் விருதாவெத்தனம் அதை விக்ஞானியாய் யிருக்கின்றபேர்கள் கைப்பிடியார்கள் தன்னை அவ்வியனாகவே யெப்போதும் பார்ப்பன். (௩௮)

மூடனானவன்சரீரத்தைப் பிடித்துக்கொண்டிருந்ததினாலேதத்துவயோகத்தைஅடையமாட்டான் தீரனுக்குக் கிரியைவிட்டுவிட்டதேமனோநிரோதனம். (௩௯)

ஒருத்தன்மனதிலே என்நேரமும் பாவனைபண்ணுவன் பின்னையொருத்தன் பாவனை பண்ணாதிருப்பன் இந்தவிரண்டும்விட்டவனே முக்திசுகத்தையடைவன். (௪0)

கேவலம் அசுத்தமான தொய்தத்தைப்புத்தியினர்பாவனைபண்ணுவார்கள் அப்படி சிவன்பரியந்தம் பாவனைபண்ணினாலு முக்தி அடையமாட்டார்கள். (௪௧)

மோக்ஷ இச்சையுண்டானவனுக்குப் புத்திசாலம்பமாக இருக்கும் நித்தியமுக்தனான நிஷ்காமனுக்குப்புத்தி நிராலம்பமாகயிருக்கும் விஷயவிஷயமென்கின்ற காட்டைப்பார்த்துச் சனங்கள்பயந்து விஷய நிரோதமாகிறதற்குஞானத்தைச் சரணமடைந்தார்கள். (௪௨)

நிர்வாசனையென்கின்ற சிங்கத்தைப் பார்த்து விஷயமென்கின்ற யானை நிருவிக்கமாட்டாமற்பயந்தோடிப்போம். (௪௩)

சமுசயந்தீர்ந்து யுத்தசித்தனானவன்முக்திக்கிசையையடைந்து சந்தோஷிப்பன்பார்க்கச்சேகேட்கச்சே பரிசமறியச்சே ஆக்கிராணமறியச்சே ரசனையறியச்சே பிரார்த்தியானத்தைக் கொண்டுசுகமாயிருப்பன். (௪௪)

புத்திவந்தனானவன் வஸ்துவைச் சிரவணம்பண்ணின மாத்திரத்தினாலே நிச்சயந்தானாக இருப்பான் இது ஆசாரம் அனாசாரமென்றும் பாரான். (௪௫)

எப்போதுயென்னசெய்யவேண்டுமோஅப்போதேசுபமசுபம் லபித்தாலுஞ் செய்துவிடுவன் குழந்தைகளைப்போலே. (௪௬)

தனக்கெப்போதுங் கருத்தத்வபோக்தத்துவங்களில்லை யென்றறிந்தபுத்திவந்தனானவனுக்குச் சகலசித்தவிருத்திகளும் அந்தக்ஷணமேநாசமடையும். (௪௭)

ஆசையில்லாமல் விக்ஞானநிதியாயிருக்கின்றவனுடைய புத்தி சவுமியமாக யிருக்கும் ஆசையுண்டான மூடனுடைய புத்தியெப்போதுங்குரூரமாயிருக்கும். (௪௮)

அத்தியந்தபோகமநுபவித்தாலுங் குகையிலேசஞ்சரித்தாலுங் கற்பனை இல்லாத யெதீசுரனுக்குப் பந்தமுக்தி இல்லை. (௪௯)

தயிரியவந்தனுண்புருஷன் தெய்வத்தை சோஸ்த்திரியாளை தீர்த்தத்தை இராசாவை ஸ்திரீகளை பார்த்துத்தோத்திரம்பண்ணியும் ஒன்றேடுங் கூடாமலிருப்பன். (௫௦)

யோகீசுரனுன்வன் புத்திரகளத்திராள் தன்னுடைய கோத்திரவர்க்கங் தன்னைசேவித்தபேரெல்லாரும் அவன்பேயனென்று துரத்திவிட்டாலும் விசாரத்தைஅடையான். (௫௧)

திருத்தியடைந்ததினுலே, சந்தோஷமுமில்லை துக்கம்வந்தபோது துக்கமில்லாமலுமிப்படிபட்ட ஆச்சரிய திருஷ்டியுண்டானபுருஷனை தம்பி அப்படிப்பட்டபேரே அறிவார்கள். (௫௨)

தயிரியனுனபுருஷன் சகசமாக நிராகாரியாய் சூனியாகாரியாய் அவிகாரியாய் நிராமயனுக இருக்கின்றுன் ஆகையாற் சமுசாரகிருத்தியமொன்றுஞ்செய்யப்போகான் மூடபாவமுண்டானவன் கருமங்களைச்செய்யாதிருந்தாலுஞ் செய்தவனே. (௫௩)

சிற்சொருபமாகயிருக்கின்றவன் செய்யாமலிருந்தும் லோகத்தார்போலேவ்யாகூலமில்லை. (௫௪)

சாந்தபுருஷனுனவன் சகல்விவகாரத்திலே இருந்தாலுஞ்சுகமே அநுபவிப்பன் சுகமாகவேவருவன் சுகமாகவேபோவன் சுகமாகவே படுத்துகொள்வன்சுகமாகவேபேசுவன்சுகமாகவேஅநுபவிப்பன். ()

விவேகபுருஷனுனவன் லோகத்தார்போலே துக்கத்தைஅடையான் மனதிலேசலனமில்லாமல் நிறைந்தசமுத்திரம்போலே இருப்பன். (௫௬)

மூடனுக்குநிவிருத்தி வந்தாலும்பிரவிருத்திமார்க்கமேபோம்நிர்மல சித்தமுண்டானவனுக்குப் பிரவிருத்தியுண்டானுலும்நிவிருத்திப் பலமேஅடைவன். (௫௭)

மூடனானவன் வைராக்கியங்கொண்டிருப்பன் சரீரமில்லாமற் போகிறவிடத்தில் ராகமெங்கே மூடனுக்குப் பாவனைபாவிக்கின்றவிடதிலந்ததிருஷ்டி தெளிவிக்குவாராது ஞானபுருஷனுக்குப் பாவிக்கத்தக்கபாவனை நிர்மலமாகச் சூனியதிருஷ்டியாம். (௫௮)

குழந்தைபோலே சகலத்திலும் நிஷ்காமனாயிருக்கின்ற முனீசுரன்சகலகருமங்களையும்பண்ணியும்ஒருகருமத்தையுமடையான் சகலபாவங்களிலும் சமத்துவமாயிருக்கின்ற மகாத்துமா ஆத்மஞானத்தினால் பார்க்கச்சே கேட்கச்சே ஆக்கிராணிக்கச்சே பரிசமறியச்சே சூனியசித்தனாய்ச்சுகமேயநுபவிப்பன். (௫௯)

ஆகாசம்போலே எப்போதும் நிர்விகற்பமாயிருக்கின்ற தீரபுருஷனுக்கு மறப்பெங்கே சாதிக்கப்பட்டதெங்கே சாதனையெங்கே. பரமமாய் ஆனந்தரூபத்திலே இருந்தும் பிரவிருத்தியில்லாத விவேகிக்குப் பந்தமோக்ஷங்களில்லை அநுஷ விஷாதமுமில்லை. ( )

இடைவிடாமற் குரூரமாகாமல் யாதொருத்தனுக்குச் சமாதி அப்பியாசமிருக்கிறதோ அவனே சலனமில்லாத நிச்சலசொரூபன் அவனே பூரணன் அவனே ஆப்தசன்னியாசியென்னப்படும். (௬௨)

அய்யா வெகுபாவிக்கியென்னத்துக்குச் சொல்லவேண்டும் ஆத்மதத்துவத்தை அறிந்தமகாத்மா போகமோக்ஷங்களிலே காங்கிசையான் எல்லாத்திலு நிரஞ்சனனாகவே யிருப்பன். (௬௧)

தொய்தமாயிருக்கின்ற மகதாதிசகத்து சின்மாத்திர சொரூபமாக விசரி விம்பித்திருக்கிறது அதைவிட்டுச் சுகபோத சொரூபமாயிருக்கின்ற மகாத்மாவுக்குச் செய்யவேண்டியகாரியம் ஒன்றுமில்லை.

இந்தப்பிரபஞ்சம் பிரமைமாத்திரம் பிரமை விட்டுவிட்டால் ஒன்றுமில்லையென்றறிந்த சிற்சொரூபன் சுபாவமாகச் சாந்தியை அடைவான். (௬௫)

ஆபாசமாகவிருக்கின்ற கிரியையைப்பாராமல்விமலபோதசொமாயிருக்கின்றவனுக்கு விதிநிஷேதமுமில்லை சாந்தியுமில்லை ராகவிகாரங்களுமில்லை. (௬௬)

புத்திவந்தனானமகாத்துமா புத்திகற்பிதமானசமுசாரம் மாயாமயமாத்திரமென்றறிந்து மோகம்அகங்காரம் ஆசைமுதலானதும்விட்டுப்போட்டுச்சுகமாயிருப்பன். (௬௭)

நாசமில்லாத ஆத்மக்ஞானிக்கி விசுவமாயறிகிறது மாயையென்றும் அகங்காரத்துவமுதலானது மில்லாமலிருப்பன். (௬௮)

மகாத்துமாவாயிருக்கின்ற புருஷன் க்ஷணமாத்திரமானாலும் ஆத்மவிரோதமானகருமங்கள் விருதாக்கதைகள் நிட்சாரமென்றறிந்துவாசிக்கான். (௬௯)

மூடனானவன் தத்துவத்தைச்சிரவணம்பண்ணியும் அதின்விசேஷமறியமட்டாமல் விஷயங்களுடனேகூடிமூடத்துவமே அடைவன் ஞானத்தினாலே விடுபட்ட கன்மமுண்டானவன்லோகத்தார் போலே தானுங்கருமஞ் செய்வான் பலனிச்சியான் ஒன்றுஞ்சொல்லப்போகான். (௭0)

சற்றும்மனதிலேகலக்கமில்லாமல் நிர்விகற்பமாயிருக்கின்ற மகாத்துமாவுக்கு இருட்டுமில்லை வெளிச்சமுமில்லை லயமுமில்லை பின்னையொன்றுமில்லை. (௭௧)

அனிர்வாச்சியமாயிருக்கின்ற சுபாவமான யோகிக்கித் தயிரியமுமில்லை விவேகமுமில்லை பயமுமில்லை. (௭௨)

யோகதிருஷ்டியினாலே கருமபலத்தை அடையாதவனுக்குச் சுவர்க்கமுமில்லை நரகமுமில்லை ஜீவன்முக்தியுமில்லை. (௭௩)

சாந்தியென்கின்ற அமிர்தத்தினாற் திருப்த்தியடைந்த தயிரியபுருஷனுக்கு லாபாலாபங்களிலே அனுஷவிஷாதங்களில்லை. (௭௪)

நிஷ்காமனாய்ச்சந்தோஷத்தை அடைந்த முனீசுரன் சாந்தனைப்பார்த்து பூசிக்கின்றதுமில்லை குரூரனைப்பார்த்து நிந்திக்கின்றதுமில்லை சுகதுக்கங்களில் சமனாய் ஒருகிரியையும் பண்ணாதிருப்பன். (எரு)

தைரிய புருஷனானவன் சமுசாரம்விட்டான் தன்னைப்பார்க்கிறதுமில்லை சந்தோஷதுக்க தோஷங்களிலே விடுபட்டு பிழைத்தவனுமல்லச் செத்தவனுமல்ல. (எசு)

ஆசையில்லாமற் பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற மகாத்மாவுக்குப் புத்திராதிகளிலேசினேகமுமில்லை விஷயங்களிலே இச்சையுமில்லை. (எஎ)

தைரியபுருஷனானவன் யெங்குஞ் சுகமாயிருப்பன் பதிதனைப் போலேயுமிருப்பன் எதாஇச்சையாகச் சஞ்சரிப்பன் சயனாதி சுகனாதிசுகங்களிலே ஆசக்திபண்ணான். (எஅ)

சோபமான இடத்திற்சேர்ந்து ஒருவிஷயமும் அறியாமலிருக்கையிற் சரீரமுண்டானாலும் லயமானாலும் அந்தமகாத்மாவுக்கு அந்தச் சிந்தையில்லை. (எகூ)

சாந்தனாய் அன்னியமில்லாமல் இதரயிச்சை சஞ்சாரியாய் நிரந்தரகிதனாய் சகல பூதங்களிலும் ஆசக்தியில்லாமல் மகாத்மாவான யோகியானவன் ரமிப்பான். (அ0)

சிதானந்தசொரூபமாயிருக்கின்ற மகாத்மாபொன்னும்மோடுஞ் சமமாகயெண்ணி மமத்துவ மில்லாமல்ருதயக்கிரந்தியறுத்துப்போட்டு இராசத தாமதங்களில்லாமற் சுகமாயிருப்பன். (அக)

எப்போது முக்தாத்மாவாகித் திருப்தியடைந்த மகாத்மாவுக்கு ஒன்றிலேஅவதானமுமில்லை வாசனையுமில்லை அவனுக்குஇணை லோகத்திலேயொருத்தருமில்லை. (அஉ)

அறிந்துமறியாதிருப்பன் பார்த்தும்பாராதிருப்பன் சொல்லியுஞ்சொல்லாதிருப்பன் இப்படிபட்டநிர்வாசனை யுண்டானவனுக்குஇணையொருத்தருமில்லை. (அ௩)

பிச்சைக்காரனானாலும் இராஜாவானாலும் நிஷ்காமனாயிருக்கின்றவன்பிரகாசிப்பன் பாவங்களிலே கூடாத புத்தியாதொருத்தனுக்குண்டாகிறதோஅதுசுகயேதுவாம். (அ௪)

சகசமான கிருதார்த்தனான யோகீசுரனுக்குத்தத்துவ நிச்சயார்த்தம்விஸதாரமுமல்லக்கொஞ்சமுமல்ல. (அ௫)

துக்கத்தையடையாமல் நிராசையுடைத்தானவனாய் ஆத்மசொரூபத்திலே திருப்த்தியடைந்தவனாய் அந்தயோகரூபமான சுவாநுபவத்துக்குச் சமமொன்றுமில்லை. (அ௬)

சுழூத்தியிலிருந்துஞ் சுழூத்தியடையான் சொற்பனத்தி லிருந்துஞ் சொற்பனமடையான் சாக்கிரத்திலிருந்துஞ் சாக்கிரமடையான் இப்படித் திருப்த்தியடைந்த தயிரியபுருஷன் மகிமை யொருத்தராலுஞ் சொல்லக்கூடாது. (அஎ)

ஞானபுருஷன் சிந்தித்துஞ் சிந்தித்தவனல்ல இந்திரியங்களுடனே கூடியுங் கூடினவனல்ல அகங்காரத்துடனே கூடியுங் கூடினவனல்ல. (அஅ)

விரக்தியுமல்ல ராகியுமல்ல சுகியுமல்ல துக்கியுமல்ல முமூட்சுவுமல்ல முக்தனுமல்ல பின்னை யொன்றுமல்ல. (அ௯)

சித்தவிட்சேபத்தை யடைந்து மடைந்தவனல்ல சமாதியிருந்துஞ் சமாதியுத்தனல்ல மூடனாகயிருந்தும் மூடனல்ல பண்டிதனாகயிருந்தும் பண்டிதனல்ல. (௯0)

முக்தனானவன் எப்போதும்போலே தீரமாகயிருப்பன் ஒருக்காலும்பெத்தனாகான் யெப்போதுஞ் சந்தோஷமடைந்து சர்வசமனா

ய்த் தன்னுடைய கிருத்தியாகிருத்தியம் நினையாதிருப்பன். (கக)

தைரிய புருஷனானவனுக்கு துதிபண்ணினவன்பேரிலே சந்தோஷமுமில்லை நிந்தைபண்ணினவன்பேரிலே கோபமுமில்லை சாகின்றதிலும் பிழைக்கின்றதிலும் பயமோகங்களில்லை. (கஉ)

சாந்தியடைந்தபுருஷனானவன் வனத்திலிருந்தாலுஞ் சனங்களிடத்திலிருந்தாலுஞ் சரியாகப்பார்ப்பன் எதாவிச்சையாகவேண்டிபடிசஞ்சரிப்பன். (கங)

இதில்எழுசுலோகம் அபாவமெனஅறியவேண்டியது.

பதினெட்டாவதுசமம்சமன்சதகம் முற்றிற்று.

பத்தொன்பதாவது

ஆத்மவிசிராந்திஅஷ்டகம்.

தத்துவக்ஞான மென்கின்ற கரணத்தினாலே சித்தத்திலேநாட்டியிருக்கின்ற அனுற்பூதவாசனையாகிற வெலும்புகளைப் பிடுங்கி போட்டு நானிற்பயமாகயிருந்தேன். (க)

என்னுடையமகிமையினாலே யென்னிடத்திலிருக்கின்றவெனக்குத் தர்மார்த்தகாமங்களுமில்லை தொய்தாத்தொய்தங்களுமில்லை. (உ)

என்னுடையமகிமையினாலேஇருக்கின்றவெனக்குப்பூதபௌஷிகவர்த்தமானமுமில்லைஇருக்கின்றவிடமுமில்லைஇல்லாதவிடமுமில்லை.

என்னுடையமகிமையினாலேயிருக்கின்றவெனக்கு ஆத்மாவுமில்லை அனாத்மாவு மில்லை சுபாசுபங்களு மில்லை சிந்தையாசிந்தையுமில்லை.

என்னுடையமகிமையினாலே யிருக்கின்றவெனக்குச் சாக்கிரசொற்பன சுழுத்தியுமில்லை துரியமுமில்லை பயமுமில்லை. (ரு)

என்னுடையமகிமையினாலே யிருக்கின்ற எனக்குத் தூரமுமில்

லை சமீபமுமில்லை உள்ளுமில்லை புறம்புமில்லை தூலமுமில்லைசூக்கு மமுமில்லை. (௬)

என்னுடைய மகிமையினாலே யிருக்கின்ற வெனக்கு மரணமு மில்லை பிழைக்கின்றதுமில்லை லோகமுமில்லை லோககாரியமுமில்லை லயமுமில்லை சமாதியுமில்லை. (௭)

பரமாத்மாவினிடத்தி லிருக்கின்ற வெனக்கு இந்திரியங்களு டைய கதையும் போதும் யோகத்தினுடைய கதையும்போதும் ஞா னகதையும் போதும். (௮)

(பத்தொன்பதாவது ஆத்மவிசிராந்தி அஷ்டகம் முற்றிற்று.)

இருபதாவது

ஜீவன்முக்திசதுர்த்தசம்.

நிரஞ்சனமாயிருக்கின்ற எனக்குப் பூதங்களுமில்லை தேகமுமி ல்லை சித்தமுமில்லை இந்திரியங்களுமில்லை மனதுமில்லை சூனியமு மில்லை விரக்தியுமில்லை. (௧)

தொந்தமுக்தனா யிருக்கின்ற வெனக்குச் சாந்தியெங்கே விக் ஞானமெங்கே நிர்விஷயசித்தமெங்கே நியமமெங்கே திருப்தியெ ங்கே ஆசையெங்கே. (௨)

சொச்சொரூபமாயிருக்கின்ற வெனக்கு ஞாநக்ஞானங்களெங் கே நானென்கின்றதெங்கே பந்தமோக்ஷமெங்கே. (௩)

எப்போதுஞ் சொபாவமாயிருக்கின்ற வெனக்குக் கர்த்தத்து வமெங்கே போக்தத்துவமெங்கே கிரியையில்லாத ஸ்மரணையெங் கே பரோக்ஷபலமெங்கே. (௪)

நிர்விஷயமாயிருக்கின்ற வெனக்குப்பிராரத்துவமெங்கே ஜீவன் முக்தியெங்கேவிதேகமுக்தியெங்கே. (௫)

அத்வைதமாயிருக்கின்றசொற்சொரூபத்திலே லோகமெங்கே முமூட்சுவெங்கே ஞானபோகங்களெங்கே பந்தமோக்ஷங்களெங்கே.

அத்வைதமா யிருக்கின்ற சொற்சொரூபத்திலே சிருட்டிசங்காரமெங்கே சாத்தியசாதனமெங்கே சாதகனெங்கே சித்தியெங்கே.

எப்போதும் சுபமாகிய நிஷ்க்கிரியனாகவிருக்கின்ற யென்னிடத்திலே விட்க்ஷேபவைராக்கியமெங்கே போதைசெடத்துவமெங்கே பிறப்பெங்கேஅனுஷவிஷாதமெங்கே. (அ)

நிரஞ்சனமாயிருக்கின்ற யென்னிடத்திலே பிரமாதாவெங்கேபிரமாணபிரமேயமெங்கே பிரமையெங்கே சமமெங்கே அதிகமெங்கே கொஞ்சமெங்கே. (கூ)

ஆரோபிதமான இந்தவிவகாரமும் பரமார்த்தமுஞ் சுகதுக்கங்களு மிதுகளிலே விசாரமில்லாத யெனக்கு எங்கேயுண்டாம். (கo)

எப்போதும்நிர்மலமாயிருக்கின்ற யெனக்கு மாயையெங்கேமறப்பெங்கே பிரிதியெங்கே விரக்தியெங்கே சீவனெங்கே பிரமமெங்கே.

கூடஸ்தனாய் அகண்டமாத்திரமாயிருக்கின்ற யெனக்குப் பிரவிருத்தியெங்கே நிவிருத்தியெங்கே பந்தமெங்கே மோக்ஷமெங்கே.

நிருபாதிகசீவனாயிருக்கின்ற யெனக்குக்குருவெங்கே சிஷியனெங்கே உபதேசமெங்கே சாஸ்திரமெங்கே புருஷார்த்தமெங்கே. (கந)

அமலஆத்மாவாயிருக்கின்றயெனக்கு உண்டென்கின்றதெங்கே இல்லையென்கின்றதெங்கேஒன்றென்கின்றதெங்கேஇரண்டென்கின்றதெங்கேஇந்தவெகுபேச்சு என்னத்துக்குச் சொல்லவேண்டும். ()

(இருபதாவது ஜீவன்முக்திசதுர்த்தசம்முற்றிற்று)

ஆக சுலோகம்-உஅரு.

ச ர் வ ஞ் சி ன் ம ய ம்.

அஷ்டாவக்கிரர்கீதை முற்றுப்பெற்றது.

பரிசோதனப்பத்திரம்.

பக்கம்.	சுலோகம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ச	எ	க	கிர	கிற
,,	கக	,,	மாங்கர	மாங்கார
ரு	கச	உ	பாசதை	பாசத்தை
,,	க	க	சாக	சாகா
எ	கச	உ	யிருங்கின்ற	யிருக்கின்ற
,,	கஅ	,,	பார்ச்கசே	பார்க்கச்சே
அ	உரு	க	சொற்க	சுவர்க்க
கூ	உ	உ	சலா	சிலா
க0	கரு	க	இருக	இருக்
,,	க	உ	கொணி	கொண்
கரு	ச	உ	யிம்லா	யில்லா
	கூ - வதில்			
கச	ச	ரு	இமில்லா	இல்லா
கரு	எ	க	கற்ப்பி	கற்பி
கசு	க	,,	வஸ்த்து	வஸ்து
,,	ரு	உ	யிருங்கின்	யிருக்கின்
உ0	க	,,	ஜீவபரீ	ஜீவபரி
,,	சு	உ	வீட்டு	விட்டுச்
உக	கரு	,,	சொர்ன்	சவர்ண
உஉ	கஎ	ரு	கிறுத்தி	கிருத்தி
உரு	கூ	உ	அவேன	அவனே
உச	ச	க	யோகங்கங்	யோகங்
உரு	ககூ	உ	ஸ்த்திரீ	ஸ்திரீ
உஎ	ச	,,	மெப்பேதும்	மெப்போதும்
,,	,,	ரு	அனைடத	அடைந்த
உகூ	ககூ	க	விடுபட்ப்டு	விடுபட்டுப்
,,	உச	உ	கிறுத்தி	கிருத்தி

பரிசோதனப்பத்திரம்.

பக்கம்.	சுலோகம்.	வரி.	பிழை.	திருத்தம்.
,,	௨௫	௨	நீனே	நினே
௩௦	௩௨	௨	பிற	பிர
௩௧	௪௦	௩	முக்தி	முக்திச்
௬௨	௪௨	௪	தர்	தற்
௬௭	௮௪	௬	பிச்ஸைக்கார	பிச்சைக்கார
௬௮	௧௨	௨	சாசாகின்ற	சாகின்ற
,,		௮	சுலேகம்	சுலோகம்.

விளம்பரத்தில் - ௧௬ - பார் பாற்

புஸ்தகஅந்தத்தில்- ௧௩ - வாரா வாரு

பாடபேதம்.

அஷ்ட்டா ... ... அஷ்டா

பெந்தம் ... ... பந்தம்

யோகீஸ்பரன் ... ... யோகீஸ்வரன்

முனிஸ்பரன் ... ... முனீஸ்வரன்

சன்னியாசம் ... ... சந்நியாசம்

பாற்கவன் ... ... பார்க்கவன்

செகத்து }
சகத்து } ... ... ஜகத்து

இவ்வண்ணம்இன்னுஞ்சிலபாடபேதத்தாற் சொற்பேதங்களுள.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ - தத்துவராயசுவாமிகளால்

அருளிச்செய்த,

சிவசிவசங்கீர்த்தனம்.

அடியவர்திறத்து நிந்தாஸ்துதி.

இவை

சமிவனக்ஷேத்திரமென்னும் கோயிலூர்

ஸ்ரீ முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ - சிதம்பரசுவாமிகள்

மாணக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமியவர்களால்

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

ஆரணி - குப்புசெட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி.

சென்னை:

ஸீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

சர்வசித்து ௵ ஆவணி ௴

சிவமயம்.

சிவசிவசங்கீர்த்தனம்.

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

அளவி றந்தது வருள்சிவ சிவசிவ
அகநி றைந்தது வடியிணை சிவசிவ
வுளமி றந்துயி ருணர்வொடு பரமற
வொளிரு கின்றது சிவசிவ சிவசிவ
களவு துன்றிய கனகலெ னுளநிறை
கழல்கொ ளன்பது களையில சிவசிவ
தெளிவி னன்குறு தெளிதரு மறுபவ
திதிதி கழ்ந்தது சிவசிவ சிவசிவ. (௧)

உபநி டங்களு முவமையில் கலைகளு
மொருமை யிங்குற வறைதரு மொருபொரு
ளபய நன்குற வருளிட வுருவுகொ
டது நடந்தது சிவசிவ சிவசிவ
வுபய வின்பமு முவகையு மொழிவற
வொளிரு கின்றது சிவசிவ சிவசிவ
நிபம தொன்றற நிகழனு பவதிதி
நிகரி றந்தது சிவசிவ சிவசிவ. (௨)

வகையி றந்தது சிவசிவ சிவசிவ
மனமி றந்தது சிவசிவ சிவசிவ

வகமதொன்றிய வநுபவ திதியமிர்
தளவி றந்தது சிவசிவ சிவசிவ
தகுவ் தன்றுள வடியவர் திரளொடு
சலனை வஞ்சனை யெனையுமொர் பொருளென
விகமெ ழுந்தரு ளிடலது கருணையி
னெலையி றந்தது சிவசிவ சிவசிவ. (௩)

ஒளிரு நன்கழ றுதிசெய வரியந
லுபநி டங்களு மொருவிர கறிகில
துளப னன்குறு மயன்முத லிமையவர்
* தொடர்வு மஞ்சுவர் சிவசிவ சிவசிவ
யளிய தன்கழ லெளிதினி லளவறு
மதிச யங்கொடு துதிசெய வெனையருள்
வளநி னைந்தென துளமுக விறைகழல்
வருசு தந்தர வலிசிவ சிவசிவ. (௪)

அளவை கொண்டுந விறைகழ லடைதர
வலம ருங்கல ருளவலி சிவசிவ
வளமில் வன்கலு மிவருள மதில்வசம்
வருதல் சங்கைய திலைசிவ சிவசிவ
வளர வன்பது விரகழி யடியவர்
மதியி லங்கிடு மிறைகழல் சிவசிவ
களவ நெஞ்சுடை யெனையுந லடிமைகொள்
கருணை யங்கடல் சிவசிவ சிவசிவ. (௫)

உருகு நெஞ்சுடன் மயிர்புள கிதம்வர
வுரைத ளர்ந்தழு துவகைசெ யடியவர்

---

* தொடரவுமென்பது - தொடர்வுமென இடைக்குறை விகாரமாயிற்று.

பருகு மின்பம திறைகழல் சிவசிவ
பகலொ டிங்கிர வதுமிலே சிவசிவ
திருகு வன்புறு மெனதுள மிதுதிகழ்
திருவு ளஞ்செய்து செறிவிட மிதுவென
வருத லென்செய்த படிசிவ சிவசிவ
வளமை யென்புகல் வதுசிவ சிவசிவ (௬)

நடலை கொண்டிர வொடுபக லறமிக
நடோ டுங்கிடு மெனதுள மதுதனை
மூடலை வன்பிணை வுடலழி பொருளுயிர்
முழுதை யுங்கொடு சிவசிவ சிவசிவ
கடலை யின்பந லமிர்தினை யெனதுறு
கரத லந்திகழ் மணியென வருளிய
படியி தென்செய்த படிசிவ சிவசிவ
பரம பண்டித னருள்சிவ சிவசிவ. (௭)

ஒருக ணந்துய ரறும்வகை யதுவற
வுகளும் வன்பவ வுததியின் மடிதரு
மிருக ணின்றிய வுறுசெவி டொயுமி
லிழிசெய் வன்பிணை வெனையுமொர் பொருளென
வருத ருந்திரு வருள்சிவ சிவசிவ
வடிவு கொண்டவ லபமிது சிவசிவ
* வருள்க ணன்றியொர் பொருளிலை சிவசிவ
வமல னென்செய்த படிசிவ சிவசிவ. (௮)

உளம தொன்றிய வொருநிதி சிவசிவ
வுடனி கழ்ந்திடு மொளியது சிவசிவ

* அருள்கண் வினைத்தொகை.

வளவி றந்தா லமிர்தது சிவசிவ
வகில மின்றிய வருள்சிவ சிவசிவ
வளம்வி ளம்பிட விரகிலை சிவசிவ
வணம தொன்றிடும் வகையிலை சிவசிவ
வெளிதி கழ்ந்தில ஙியதுதி சிவசிவ
விகிர்த னென்செய்த படிசிவ சிவசிவ. (௯)

கருணை யம்புய முகமலர் சிவசிவ
கருணை யங்கட லிருவிழி சிவசிவ
வருண யந்திடு மடியிணை சிவசிவ
வழகு துன்றிய வடிவது சிவசிவ
விருண யந்திடு மிடருறு பிறவியை
யெறியு மெந்தைதன் மறமது சிவசிவ
திருந டன்றன தருள்சிவ சிவசிவ
சிவநி கழ்ந்தது சிவசிவ சிவசிவ. (௧௦)

சிவசிவசங்கீர்த்தன முற்றுப்பெற்றது.

அடியவர்திறத்து நிந்தாஸ்துதி.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

காயமா ளிகையதுண்டு மூவர்கா தலிக ளுண்டு
வாயல்காப் பறிவுமுண்டு வளம்படு சமதமாதி
யாயநற் சுற்ற முண்டங் கடக்கரும் பொருளுமுண்டு
தூயநற் சுரூபா னந்தன் றொண்டர்க ளிறந்ததென்னே. (௧)

அன்பர்பா லார்வமுண்டங் கரும்பவச் செற்றமுண்டு
வன்பதார் விஷயந்தன்மேன் மாறிடாக் குரோதமுண்டு
முன்புறப் பக்கமேல்கீழ் முழுதுமா நிதியுமுண்டு
துன்பமில் சுரூபானந்தன் றொண்டர்க டுறந்ததென்னே. (௨)

ஒன்றொடுங் கலந்திராத வுறவின்மை பெரிதுமுண்டு
பொன்றினு மசைவுறாத முரண்வலி புகலினுண்டு
கன்றிடும் வயிரியோடுங் கலக்கமி லன்புண்டென்றாற்
றுன்றருட் சுரூபானந்தன் றொண்டர்க டுறந்ததென்னே. (௩)

கல்லுறு சிந்தையெல்லாங் கரைக்கும்வல் லபமுமுண்டு
வல்லவர்க் கொருகாலத்து மிரங்கிடாமறமுமுண்டங்
கெல்லையற் றிடுமிரக்க மிறையொடு மிகவுண்டென்றாற்
றொல்லைநற் சிவப்பிரகாசன் றொண்டர்க டுறந்ததென்னே. (௪)

முன்பினு மலைவுதீர மொழிதரு விரகதுண்டு
நன்கொடு தீங்குகாணு ஞானமாஞ் செருக்குமுண்டு
வன்புறு துன்பம்வந்தான் மயக்கமில் களிப்பதுண்டு
துன்பமில் சுரூபானந்தன் றொண்டர்க டுறந்ததென்னே. (௫)

கோத்தவை குலைத்துமேலாங் குணமின்மை பெரிதுமுண்டு
பார்த்தவ ருயிர்கண்ணாலே வாங்குபண் பின்மையுண்டங்
கேத்துறு மேழைகட்கே யெளிவரு மியல்புண்டென்றா
லாத்தனன் சுரூபானந்த னன்பர்க டுறந்ததென்னே. (௬)

உலகியல் புறவுணர்ந்த வுன்மத்த மிகவுமுண்டு
தலைவன தருளதன்றித் தணிப்பரும் பித்துமுண்டு
மலைவுறு பகுதிபோர்ந்து வாதனை மாண்டதுண்டு
நிலையுடைச் சுரூபானந்த னேசர்க டுறந்ததென்னே. (௭)

தள்ளினு மிறைவனன்பர் தமைவிடாப் பாசமுண்டு
நள்ளினு மிதரர்தம்மை நணுகிடாத் துவேஷமுண்டு
துள்ளும்வன் னெஞ்சவஞ்சர்க் கருளிடாச் சோரமுண்டாற்
றெள்ளுநற் சுரூபாநந்தன் சித்தர்க டிறந்ததென்னே. (அ)

* ஏத்தினர்க் கருத்தேசெய்தங் கெளிவரு மிச்சையுண்டு
தோத்திரச் சூழலுற்றுச் சுழலும்வன் பற்றுமுண்டு
சாத்திரப் பேய்களுக்குச் சலனஞ்செய் தவறுண்டென்றாற்
றீத்தனற் சுரூபானந்தன் சித்தர்க டிறந்ததென்னே. (கூ)

களையில்பே ரின்பத்தாராக் காமுகர் விஷயகோப
ருளையறு பொருடம்முள்ளே யொளித்துப்பே ணிடுமுலோபர்
முரிவில்பே ரின்பத்தீசன் வயமுயிர் காணுமோகர்
நிலையுமெம் மதமுந்தாமா நிமலர்க டிறந்ததென்னே. (கO)

வரும்பவத் தாறுச்சிற்ற மாற்சரியத்தர் தன்னைத்
தருங்குரு பரன்றுளன்றித் தாழ்ந்திடாத் தெம்பர்தீரா
வரும்பவ நாசனெங்கட் குண்டெனு மகங்காரத்தர்
பரம்புமா யாபைசுன்ய பண்பினர் துறந்ததென்னே. (கக)

நிலவருட் பொறையர்நேதி நேதியே நிரூபகத்தாற்
குலவுறு நற்சந்தோஷர் குருபரன் முழுதுமென்னச்
சொலிதையுற் றிடும்விவேகர் தோய்வெதி ரிக்தசாந்தர்
தொலைவில்சித் தவிரோதத்தர் தூயவர் துறந்ததென்னே. (கஉ)

உற்றவா ரோபிதங்க ளொழிந்தவா றுதருமமான்
முற்றுமாய் மொழியிறந்து முடிந்தமோ னத்தராமாற்
பற்றுவீ டின்றிநின்ற பராமிர்தா னந்தர்தாமாற்
றுற்றசீர்ச் சுரூபானந்தன் றொண்டர்க டிறந்ததென்னே. (கங)

---

* ஏத்தினர்க்கருத்தென விசைநோக்கியிருந்தது.

சுட்டிய வெவ்வயுந்தாமாய்த் தூறக்கூவே றென்றின்றனல்
விட்டதும் விடாதுமன்றி வேதமோர்நான்கும் பேணப்
பட்டிடு மளவுமல்லாப் பரம்பரன் சுரூபானந்தன்
சிட்டர்க டுறந்தாரொன்னும் வார்த்தையுஞ் சிறப்பதன்றே. (கச)

அடியவர்திறத்து நிந்தாஸ்துதி முற்றிற்று.

இஃது அஷ்டாவர்க்கிரர்கீதைத் தொடர்பு.

இந்தப்படி சகல உபநிஷத்துக்களிலேயும் பிரதிபாதிக்கப்பட்ட ரகசியமான ஆத்மவித்தையை அஷ்டாவர்க்கிரரிஷியால் பாற்கவ ரிஷிகேட்டுச் சமுசயந்தீர்ந்து ஆத்மசுகத்தை அடைந்தார் ஆனபடியா லிக்காலத்தில் ஆத்மவித்தையை அடைய விருப்பமுடைய அனேவோரு மிக்கிரந்தத்தி லதிகவிருப்பம்வைத் தனுட்டிக்கி லடையத்தக்க பிரயோஜனத்தை அடையலாம் இது சித்தம் அனேகருடைய வேண்டுகோளின் நிமித்தங்கிடைத்த பிரதிகளைக்கொண்டு ஒருவாராராய்ந்து அச்சிடப்பட்டது ஆனபடியாலிதில் சொற்சோர்வு பொருட்சோர்வுமுதலிய குற்றமிருக்குமேலிக்கிரந்தம் பார்வைசெய்யும் அரியகுணகண அலங்கிருதாதிகளையே சோபையாகவுடைய சாதுக்கள் மன்னிக்கவேண்டியது.